323


# ஶ்ரீ
# செந்தமிழ்ச் செல்வி






சிலம்பு-கச] யுவ—மாசி [பரல்-எ


## திருவாசகம்

### கோயிற்றிருப்பதிகம்

அரைசனே யன்பர்க் கடியனே னுடைய
  வப்பனே யாவியோ டாக்கை
புரைபுரை கனியப் புகுந்துநின் றுருக்கிப்
  பொய்யிருள் கடிந்தமெய்ச் சுடரே
திரைபொரா மன்னு மமுதத்தெண் கடலே
  திருப்பெருந் துறையுறை சிவனே
யுரையுணர் விறந்துநின் றுணர்வதோ ருணர்வே
  யானுன்னை யுரைக்குமா றுணர்த்தே.

பதவுரை:—

அன்பர்க்கு அரைசனே—(நீ உயிர்கட்கு இடைவிடாது செய்யும் அருட்செயலை அறிந்து நினைந்து உருகி உன்னிடம் மெய் அன்பு செய்யும்) அடியார்களுக்கு நீயும் அன்புடையவனாயிருந்து அவர்களை அடிமையாக ஆண்டு அருள்செய்கின்ற தலைவனே

அடியனேனுடைய அப்பனே—(அவ்வாறு உனது தன்மையிருத்தலால்) சிறியேனாகிய என்னையும் மகன் என்கிற கேண்மையில் திருப்பெருந்துறைக்கு வந்து ஆண்டருள்செய்த எனது தந்தையே

ஆவியோடு ஆக்கை புரைபுரை கனியப் புகுந்து நின்று உருக்கி—உயிரை உருக்குதலுடன் அவ்வுயிரிருக்கும் உடலிலுள்ள துளைகளெல்லாம் கனியும்படி அவற்றினுட்புகுந்து நிலையாகநின்று (உடல் பொறிகரணங்களையெல்லாம் நெக்கு நெக்காக) உருகும்படி செய்து

பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே—அவ்வுயிரிலும் உடம்பிலும் நிறைந்துவிரவி உலகபோகத்தை நிலையாயுள்ளது எனமயங்கி அறியும்படி செய்கின்ற மலத்தன்மையை முற்றிலும் நீக்கி அருளிய என்றும் உளதாகிய அருட்பேரொளியே

திரை பொரா மன்னும் தெண் அமுதக்கடலே—உலக இன்பதுன்ப அலைகளாகிய விகாரங்கள் மோதாது என்றும் ஒருதன்மைத்தாய் நிலைபெற்றிருக்கும் தெளிந்த அமுதம்போன்ற இன்பக்கடலே

திருப்பெருந்துறை உறை சிவனே—திருப்பெருந்துறையில் திருக்கோயில் கொண்டெழுந் தருளியிருக்கின்ற சிவபெருமானே

உரை உணர்வு இறந்துநின்று உணர்வது ஓர் உணர்வே—ஒருவர் நாவினால் உரைக்கப்பெறுஞ் சொல்லையும் மனதினால் அறியப் பெறும் சுட்டறிவினையுங் கடந்து (அன்பினாலுருகி நின்னோடு இரண்டறக்கலந்து) உணர்ந்து உணரும் தன்மையுடைய ஒப்பற்ற உணர்வுப்பொருளே

யான் உன்னை உரைக்கும் ஆறு உணர்த்து—இப்பேர்ப்பட்ட தன்மையை உடைய உன்னை உன்னின் வேறாகநின்று நாவினால் உரைக்கும் வழியை அறிவிப்பாயாக (நாவினாலுரைக்க முடியாது என்றபடி.)

விளக்கவுரை:—

அன்பர்க்கு அரைசனே—சிவபெருமான் எல்லா உயிர்களுக்கும் பொதுவாக ஆண்டவனாயிருப்பினும் தனது முழுமுதற் றலைமையை அறிந்து அத்தலைமைக்குள் அடங்கிநின்று தன்முனைப்பின்றி அன்புடன் வழிபடும் அடியார்களைச் சிறப்பாக ஆண்டருள் செய்தலின் அன்பர்க்கு அரைசனே என்றார். அரைசன் என்ற சொல் இங்கே ஆண்டு காத்தருளும் தலைவனைக் குறிக்கிறது.

அடியனேனுடைய அப்பனே—"என் அப்பன் என்னையும் ஆண்டு கொண்டருளிய அற்புதமறியேனே" என்று அடிகள் அற்புதப் பத்து ஏழாவது பாட்டிற் கூறியருளினமை காண்க.

ஆவியோடு, ஆக்கை புரை புரை கனியப் புகுந்து நின்று உருக்கி—புரை புரை கனிய என்ற சொற்றொடரை ஆக்கையைத் தழுவுவதாகக் கொள்க; அதாவது, ஆவியோடு, புரை புரைகனிய ஆக்கை (யிலும்) புகுந்து நின்று உருக்கி என இயைத்துப் பொருள் கொள்க.

உருகுதல் உடனிகழ்வதாகக் கூறப்பட்ட ஆவி ஆக்கை என்ற இரண்டு பொருள்களுள் ஆவி உயர்வுடைய பொருளாதலின் ஆவியோடு ஆக்கை என ஆவியைத் தலைமைப்பொருளாக வைத்து அடிகள் கூறினார். மெய்ச்சுடர் ஆவியுட்புகுந்து நின்று உருக்குதல் அவ்வாவியின்கண் பின் நிகழும் பொய்யிருள் கடிதலுக்கும்

மெய்ச்சுடர் புரை புரைகனிய ஆக்கை(யுட்) புகுந்து நின்று உருக்குதல் அவ்வாக்கையின்கண் பின் நிகழும் பொய்யிருள் கடிதலுக்கும் காரணங்களாய் இன்றியமையாது வேண்டப்படுவன. குளிகையுடன் ஒரு குகையில் வைத்து உருக்கப்பட்ட செம்பு தன்னைச்சேர்ந்துள்ள களிம்பு நீங்கிப் பொன்னாக மாறுதல் போல உடலின்கண் மலத்தன்மையோடு சேர்ந்துள்ள சீவன் அருளை அறிந்து உருகி அருளைச்சார்ந்து அதன் வயப்பட்டபொழுது மலத்தன்மையோடுகூடிய சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மையாக மாறுதலடையப்பெறுகிறது என்பது உருக்கி என்றதனாற் போந்தபொருள்.

பொய் இருள் கடிந்த மெய்ச்சுடரே--பொய் என்பது நிலையாமை; அசத்து. அது இங்கே நிலையில்லாத உலக போகத்தைக் குறிக்கிறது. "பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாடோறும்" என்று திருக்கோத்தும்பி 17-வது பாட்டில் பொய்என்பது நிலையாமை என்று பொருள்படுதல் காண்க. இருள் என்பது மலத்தைக் குறிக்கிறது; அஃது ஊனக்கண்ணுக்குப் பொருளைத் தெரியவொட்டாமற் செய்தல்போல மலம் தான் விரவியுள்ள பொருளின் உண்மைத்தன்மையை மக்கள் அறியவொட்டாமற் செய்தலினால் மலம் இருள் எனப்பட்டது. பொய் இருள் என்பது நிலையில்லாத உலகபோகத்தை நிலையுள்ளது என மயங்கி அறியச்செய்கிற மலம் என்று பொருள்படும். மெய் என்பது என்றும் உள்ளது, சத்து; சுடர் என்பது முப்பத்தாறு தத்துவங்களையுங் கடந்து உளதாகிய அருட்பேரொளியைக் குறிக்கிறது. மெய்ச்சுடர் என்பது என்றும் உளதாகிய அருட்பேரொளி; மெய்ச்சுடர் ஆவியுட்புகுந்து நின்று பொய் இருள் கடிதல் என்பது ஞாயிற்றினொளியாவது ஒருவன் கண்ணுக்குப் புற இருளை நீக்குதல் போல அருட்பேரொளி சீவனிடத்துள்ள மலத்தினாலுண்டாவதாகிய அகஇருளை நீக்குதல் ஆகும். மெய்ச்சுடர் புரை புரைகனிய ஆக்கை(யில்) புகுந்து நின்று உருக்குதல் என்பது அருட்பேரொளியானது உடல் பொறிகரணங்களில் விரவியுள்ள மலத்தன்மையை முற்றிலும் நீக்கி அவற்றைச் சிவகரணங்களாக விளங்கச் செய்தல் ஆகும். புரை என்பது உட்டுளை. ஆக்கை புரை புரைகனியப் புகுந்து நின்று உருக்குதல் என்பது உடம்பினிலும் அதனிடத்தினுள்ள மயிர்க்காற்றுளைகள் எலும்புத்துளைகள் நரம்புத்துளைகள் முதலிய எல்லாவற்றிலும் ஊடுருவிக் கலந்து அவற்றையெல்லாம் இளகச் செய்து உருக்குதல். இவ்வாறு உடல் உருகினாலன்றி அது ஒருவழிப்பட்டு உயிரின்கண் அடங்கிநிற்ப அவ்வுயிரும் உருகி இறைவன் வயப்பட்டு அடங்கி நில்லாது ஆதலின் ஆக்கை புரை புரைகனியப் புகுந்துநின்றுருக்கி என்றார்.

திரை பொரா மன்னும் அமுதத் தெண்கடலே—திரை என்பது அலை. அது இங்கே உருவகமாய் உலகவாழ்விலுள்ள இன்ப

துன்பங்களைக் குறிக்கிறது. கடலில் எப்பொழுதும் அலைமோதி விகாரம் செய்தல் போல உலகவாழ்விலுள்ள இன்ப துன்பங்களால் மக்கள் மொத்துண்டு விகாரம் அடைகின்றார்கள்—பொராது என்ற வினையெச்சத்தில் 'து' விகுதி தொக்கி நின்றது. மன்னும் என்பது விகாரமடையாது என்றும் ஒரு தன்மைத்தான அமைதி நிலையோடு பொருந்தும் என்று பொருள்படும்; நிலையான பேரின்பம் அடைதற்கு நிலையான அமைதி இன்றியமையாது வேண்டப்படுதலால் அடிகள் அவ்வாறு கூறியருளினர். அமுதம் என்பது அமுதம் போன்ற இன்பம். தெண் அமுதக்கடல் என்பது உப்பினோடுகலந்த கடல்போல அல்லாது தெளிந்த அமுதக்கடல். சிவபெருமான் அளவில் இன்பம் உடையன் ஆதலின் அவனை அடிகள் தெண் அமுதக்கடலே என்றார்.

உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே—உரை உணர்வு உம்மைத்தொகை. உரை என்பது பாசஞானத்தையும் உணர்வு என்பது பசுஞானத்தையும் குறிக்கும். "உரை உணர் விறந்த ஒருவபோற்றி" என்று போற்றித்திரு அகவலில் வருதல் காண்க. உணர்வது என்பது உயிர் இறைவனோடு இரண்டறக் கலந்து நின்று உணர்வது ஆகும். அதாவது பாசஞானம் பசுஞானங்களால் உணராது பதிஞானத்தால் மாத்திரம் உணர்வது ஆகும்.

யான் உன்னை உரைக்கும் ஆறுஉணர்த்து—சிவாநுபோகம் நாவினால் உரைக்க முடியாமையைக் குறிக்கிறது. இக்கருத்தை "எங்ஙனிருந்த தென்றெவ்வண்ணஞ் சொல்லுகேன் அங்ஙனிருந்த தென்றுந்தீபற, அறியுமறிவ தென்றுந்தீபற" என்று திருவுந்தியார் 4-வது பாட்டுக்கூறுகின்றது—அகத்திற்கண் கொண்டு காண்பதே ஆநந்தம் என்று திருமூலர் கூறியருளினர் (திருமந்திரம் 2944 வது பாட்டு.) இந்தப்பாட்டில் அடிகள் இறைவனை ஆவியோடாக்கை புரை புரைகனியப் புகுந்து நின்றுருக்கிப் பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே என்று விளித்துக் கூறியதனால் இறைவன் தமக்குத் தன்னையேஅறியும் தனி அறிவு நிலையை அறிவித்தான் என்பதும், உரை உணர்விறந்து நின்றதோருணர்வே என்று விளித்துக் கூறியதனால் இறைவன் தமக்குத் தன்னையே உணரும் தனிஅன்புநிலையை உணர்த்தினான் என்பதும், திரை பொராமன்னும் அமுதத் தெண்கடலே என்று விளித்துக் கூறியதனால் இறைவன் தமக்குத் தன்னுடைய திருவடிகளையே அடையும் தனிச்செயல் நிலையை அடைவித்தான் என்பதும் கூறியவாறாயின. இந்தச்சிறப்பு இயல்பு அத்துவித நிலைகள் மூன்றும் ஆன்மா பேரின்பநிலை அடைதற்கு முன்னுறுவனவாகிய அநுபோக இலக்கணங்களாகும். *யானுன்னை உரைக்கு

* இவ்வுண்மை "இன்றெனக்கருளி" என்னும் முதற்குறிப்புத் திருவாசகப்பாட்டு உரையில் விரிவாக விளக்கி கூறப்பட்டிருக்கின்றது.

மாறுணர்த்தே என்றதனுல் இப்பேரின்ப அநுபோகம் இன்னது என நாவினுல் உரைக்க முடியாது என்பது கூறப்பட்டவாருயிற்று.

—மா. வே, நெல்லையப்பபிள்ளை.

---

## திருஞானசம்பந்தர் தேவாரம்

### திருவாலவாய்

வீடலால வாயிலாய்வி ழுமியோர்க ணின்கழற்
பாடலால வாயிலாய்ப ரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய்க பாலிநீள்க டிம்மதிற்
கூடலால வாயிலாய்கு லாயதென்ன கொள்கையே.

இத்திருநெறித்தமிழ் திருவருண்ஞானம் பக்தி கன்மங்களின் வைத்துச் சிவபோகம் விளக்கும் ஆற்றல் உணர்த்திற்று.

இதன் பொருள்: வீடல்—சிவப்பேற்றை, ஆலவாயில்—கல்லாலின்புடை, ஆய்—ஆராய்கின்ற, விழுமியோர்—சனகாதி மேலோர் (பற்று ஆகிய), நின்கழல்—உமது திருவடியை, பாடலால்—(அன்பர்) பாடுகின்ற துதிகவிகளால், அவ்வாயிலாய்—அவர் நாவகத்து நிற்பீராகி, பரவ—துதிக்க, நின்ற—நிற்கின்ற, பண்பனே—உதாரகுண சீலரே, காடு அலால்—புறங்காட்டில் அன்றி, அவாய் இலாய்—விரும்பியிரீர், கபாலி—காபாலியே, நீள் கடிமதில்—நீண்ட அரணுள்ள மதில் சூழ்ந்த, கூடல் ஆலவாய்—கூடல், ஆலவாய், மதுரை யென்ற திருநகரின்கண், இல்லாய்—திருக்கோயில் கொண்டவரே, குலாயது என்ன கொள்கை—ஆடல் உகந்து எம்மகத்து மகிழ்ந்து வீற்றிருப்பது என்ன தன்மைத்து! மிக்கவியப்பினைத்தருவது ஒன்ருதலின், அஃது நம்மைப் புரக்க.

"மங்கையர்க்கரசி" என்ற திருப்பாட்டை முன்னரும் இத்திருப்பாட்டைப் பின்னரும் ஓதிப் பதசாரம் காண்க. இதன்கண் முன்னிரண்டடிகளால் முனிவர்க்கரியவர் அடியார்க்கெளியராயினரென இறைவரது சௌலப்பிய குணமும் பின்னிரண்டடிகளான் புறங்காடரங்காகத் தமித்துத் தமது சக்தியை உட்கரந்து நின்ருடும் மாசங்கார கருத்தாவானவர் இத்திருநகரின்க்ண் மணிவிமக்களோடு வதியும் அன்பர் குழுவின் நடுவுள் உமாஸ்கந்தராய், இறைவராய், அரையராய்,

சுந்தரராய் ஆடல் உகந்து குலாவுகின்றார் என்னும் கல்யாண குணமும் விளங்கும். யோகியாய் யோகிகட்கு அருளும் அப் பரிசே போகியாய்ப் போகிகட்கும் வாய்த்தது.

சிவதருமம் முற்றிய முனிவர் ஆராய்ச்சி முடிவில் அனுபவித்தற்குரிய பேற்றைப்பெற அருந்தவமுழன்று கைலை சென்று ஆலடியில் உசாவிநின்ற பெரும்பெயரை அன்பர்தமது பாடலாற்பெற அவர்நாவினிடத்து வலிய வந்து நின்றார் என்றும், புறங்காட்டன்றி ஏனையிடங்களினில்லாதார் பிரமாவையுங் கடிந்த ஆற்றலாற் கடிம்மதிற்கூடலின்கண் சொக்கராயினாரென்றும் இறைவர்தம் சொரூப தடத்த லக்ஷணங்களும் ஆட்பால் அவர்க்கு அருளும் ஆதிமாண்பும் விளக்கப்பட்டன. இறைவனது நிரேதுக கிருபை கேட்பான்புகில் கிளக்கவேண்டாத் தன்மையிற் பரந்து நின்று நம்மைப் பலபடித்தானும் புரக்கும் என்பது புலப்படும்.

வீடல்—பாசக்ஷயம், சிவப்பேறு, வீடு, பகுதி விடு எனக் கொள்ளின் அல் சாரியை. கம்பலங் கைத்தலம் தேம்பலஞ் சிற்றிடை என்னும் கோவைத் திருவாசகத்திற்குப் பேராசிரியர் உரையிற் கண்டது. வாயில் ஏழனுருபு. ஆய் சாலங்கரந்த பெயரெச்சம். ஆய்கழல், பாடலால், பரவ வாயிலாய் நின்றவென வியைக்க. விழுமியோர் ஆய்என மொழிமாற்றியும் ஆய் விழுமியோர் பரவ எனக்கொண்டுகூட்டியும் பொருள் கொள்ளலுமாம். விழுமியோர் ஆராய்ந்துணர்ந்த கழல் ஈண்டு அருள். இரண்டனுருபு தொக்கது. அல்லது பண்பன் கழல் என முதலும் சினையும் நின்ற என்ற வினையொடு முடிந்ததெனக் கோடலும் ஒன்று. அவாயிலாய் எச்சமுற்றாகலின் வலிமிகாது இயல்பாயிற்று. அலால்—தொகுத்தல். அவாய் செய்து என்னும் வாய்பாட்டைச் சார்ந்த வினையெச்சம். இலாய்-இன்மை பகுதி: இல் (கோயில்) பகுதி. ஆண்பாற் பெயரின் ஈற்றுனகரம் யகரமாகத் திரிந்தது விளித்தனு. கடிம் மதில்—ஒற்றில் வழி ஒற்று. நாமபேதங்கருதி மதுரையுங் கூட்டப்பட்டது. கபாலி—குறுக்கல்விகாரம். அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய் நிற்றலைக் காட்டக் கபாலி என்றார். நமக்கு எடுத்துக்கூறிய சமயகுரவரது திருவாய் மொழி நம்மைப் புரக்க.

இத்திருப்பதிகத்தின் க, ரு, சு, கக இத்திருப் பாட்டுக்களையும் திருஞானசம்பந்தர் புராணம் அசுச—சுரு திருவிருத்தங்களையும் ஓதுக.

—ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை.

# புதுக் கவிகள் - Original Poetry

## விருத்தம்

முன்னைபாணர் பரிபாடல் முழுதுங்கேட்ட முழுமுதலே
மூவாவமிழ்தே அருளளிக்கு முனிவாமுனிவ ரேறேசொல்
பின்னைசங்கப் பெரும்புலவர் பீடார்முருகாற் றுப்படையை
பேணிமகிழ்ந்தா யருட்சேந்தன் பெரியவிருத்த மதின்மகிழ்ந்தாய்
அன்னைநீபின் அருணகிரி அருட்பாப்புகழுன் செவிமடுத்தாய்
அடியேனின்னை மழைவரவொன் றார்த்துமேகம் பொழிந்திடவே
மன்னேபரங்குன் றுடையாய்முன் வழுத்தும்பாட லதுகேட்டு
மழையாய்ப் பொழிவாய் அருட்கருணை வடிவேலெடுத்த
[பெருமானே !

விரும்புமடியேன் தனதகத்துள் விளங்கும் விளக்கே வெளிகடந்த
வெளியின்ஒளியே ஒளிஒளிரும் வேலேந்தியமெய்ப் பெருமானே
அரும்புமலரும் காயுமென அதன்பின்கனிபோன் முயிர்களெலாம்
அருந்தப்புனலிங் கில்லாது வருந்தக்கிடத்த லழகோசொல்
கரும்புமமிழ்தும் தேனும்பால் கலந்தபாகும் போன்றினிக்கும்
கனியேகனியின் சுவையேயென் கருணைக்கடலே கடல்வளமே
திரும்பும்படிக்கு முகில்களெலாம் திரண்டுன்றலத்து மழை
[பொழிவான்
செய்வாய் பரங்குன் றுடையண்ணல் செய்வாயருணீ
[செய்வாயே !

—வித்துவான் மதுரஞ்சுந்தரபாண்டியனார்

---

இவை திருப்பரங்குன்றம் மழையில்லாது வருந்தியகாலத்து மதுரை வித்வான் மதுரஞ் சுந்தரபாண்டியனாரவர்கள் முருகக்கடவுள் மீது பாடிய மழைபொழிபாடல்கள். இவை 1-10-34-ல் பாடப்பெற்றன. 5-10-33 ல் நல்ல மழை பெய்து நீர் நிலைகளெல்லாம் நிரம்பினவென்பது ஈண்டுக்குறிப்பிடத் தக்கது.

## தமிழர் தொன்மை

ஒண்மை யறிவு மோர்வுமிக் கோரே
உண்மை கேண்மின் உண்மை கேண்மின்

மீன்கொடி படைத்த மேன்மை மனுக்கள்
ஆன்ற பாண்டிய ரனைவருந் தமிழர்

தெற்கட் பஃறுளி யாறு சீர்சால்
நற்புகழ் வடக்கண் நளிரிமை யார்மலை

வரைதமிழ் நாடா வயங்கிய முற்கால்
திருவிட மெனும்பே ரதற்குச் சிறந்தது

பின்னா ரியர்கள் பிறங்கின் னாட்டில்
உன்னிவந் தேகுடி யுறுமுன மிங்குத்

தமிழ்மொழி வழக்குந் தகையொண் ணூலும்
இமிழிசை யைந்திணை இனமுந் தேவும்

போற்றவர் யார்க்கும் பொதுச்சிவக் கோளும்
ஆற்றருந் தளியு மகத்தெண் ணெழுத்தும்

நயமிகு மொழுக்கமும் நனிசீர்த் தேற்றமும்
உயிர்த்திருந் தனவற முனேற்றர சிருந்தது

மற்றிவை யாவும் வான்றமிழ்ப் புலவர்
சொற்ற மொழிகள் தொகைப்படு வேதம்

ஆகமம் புராண மவிரிதி காசம்
வாகய லார்சொல் மருளி லாங்கிலர்க்

கற்றவர் கற்பொறி கவின்பந் தர்க்கார்
கத்தர் முன்னையர் தம்முறை வழியால்

துணியப் பட்டன, தொன்றீ ரினத்தில்
இணங்கா நாற்குல மியற்றினர் பின்னோர்

என்னனு மொருதலை யிவையுண்
மன்னி யுணர்ந்து மயக்கொழி வீரே.

—சாமி. விருதை. சிவஞானயோகி, கோவிற்பட்டி.

தமிழ்ப்பிரம சூத்திராசியர்

# ஹிந்திமொழிப் பயிற்சியா?

[தி. சு. நடராச பிள்ளையவர்கள் பி. ஏ.]

இந்திய நாட்டின் பொது மொழியாய் இருக்க யோக்கியதையுள்ள மொழிகள் இரண்டு எனப் பல பெரியார்கள் கூறி வருகின்றனர். அவற்றுள் ஒன்று ஹிந்தி மொழியாம்; மற்றொன்று ஆங்கிலமாகும். இவ்விரண்டு மொழிகளில் எம்மொழி நம் நாட்டின் பொதுமொழியாய் ஏற்றுக்கொள்ளக் கூடிய சிறப்புப்பெற்றுள்ளது என ஆராய்வோம்.

ஹிந்தியைப் பொதுமொழியாக்க வேண்டுமென்பது நம் நாட்டவர்களில் ஒருபகுதியினரின் கருத்து. ஆங்கிலமே பொதுமொழியாய் இருக்கவேண்டும் என்பது மற்றொரு பகுதியினரின் கருத்து. இது சமயம் பொதுமொழியாய் இருந்து வருவது ஆங்கிலமே.

இனி நம் இந்திய நாட்டின் தேவைகளையும் நம் தாய் மொழியின் நன்மையையும் எடுத்துக்கொண்டு இரண்டிற்கும் எம்மொழி நன்மையளிக்கும் எனப் பார்ப்போம்.

நம் நிலை என்ன? இன்று நாம் அடிமைகளாய் இருக்கின்றோம், ஆண்மையற்றவர்களாய் இருக்கின்றோம்; ஏழைகளாய் இருக்கின்றோம். நம் தேவை என்ன? நாம் சுதந்தர மக்களாய் வலிவுள்ளவர்களாய் வாழவேண்டும்; நம் ஏழ்மை நிலை ஒழியவேண்டும் என்பதே.

## ஹிந்தி நமக்குச் சுதந்தர மளிக்குமா?

நமக்கு உரிமை வேட்கை ஊட்டிய மொழி எது? எம்மொழியில் நமக்குத் தேர்ச்சி இருந்தால் நாம் நம்மை ஆள்பவர்களுடன் சரியாய் வாதாடமுடியும்? நமக்கு முதல் முதல் உரிமைவேட்கை ஊட்டி நம்மைத் தட்டி எழுப்பிய சொற்பொழிவுகள் எம்மொழியில் செய்யப்பட்டன? நமக்கு ஆங்கிலக்கல்வி கற்றுக்கொடுக்கப்படாவிட்டால் நமக்கு உணர்ச்சி இவ்வளவு விரைவில் எழுந்திருக்குமா என்பது சந்தேகம்தான். ஆங்கில நாட்டு வீரமக்களின் சரிதமே நமக்கு ஊக்கமளித்தது; இன்றும் ஊக்கமளிக்கின்றது எனக் கூறின் அது மிகையாகாது. ஜோன் ஆவ் ஆர்க்கின் சரிதம் எத்தனைபேர்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்டுள்ளது? பதுமினியின் வீரமோ அல்லது ராணிலக்ஷ்மிபாயின் வீரமோ ஜோனின் வீரத்துக்கு இளைத்ததன்றெனினும் இது இந்நாட்டு மக்களில் ஒரு பகுதியினருக்கே, அதாவது,

இந்துக்களுக்கே, ஊக்கம் கொடுக்கக்கூடியதாய் இருக்கும். சிவாஜி மன்னரின் ஒப்புயர்வற்ற வீரதீரச் செயல்களைப் புகழ்வது முஸ்லீம் நண்பர்களுக்கு ஒரு சிறிது மனத்தாங்கலை உண்டுபண்ணவே செய்யும். இந்து முஸ்லீம் ஒற்றுமைக்கும் நம் சாத்வீகப்போர் முறைக்கும், ஆங்கிலப் பாராளுமன்றத்தில் வாதாடிய பிம் ஹாம்ப்டென் (Pym Hampden) என்பாரின் சரிதங்கள் ஊக்கமத்ளிது நம் தேசிய உணர்ச்சியை வளர்க்குமேதவிர ஹிந்திமொழியிலுள்ள சரிதங்களோ, ஹிந்திமொழியின் அபிவிருத்தியோ பலனளிக்காது.

இனி வருங்காலம் குடியரசு ஆட்சிக்காலம். அவ்வாட்சியைச் சென்ற ஆயிரமாண்டுகளாய்க் கையாண்டு வருகின்ற ஒரு நாட்டின் அநுபவங்கள் முழுதும் ஆங்கிலத்தில் காணக்கிடக்கின்றன. வருங்கால ஐக்கிய இந்திய அரசாங்கத்தின் அடிப்படை கோலவல்லாருக்கு ஆங்கிலம் பெரிதும் ஊன்றுகோலாய் உதவுமே யொழிய, சுதந்தரமே காணுத ஹிந்திமொழி பலனளியாது.

ஆனல் ஹிந்திமொழி பேசக்கற்றுக்கொள்வதால் வடநாட்டுப் பெரியார்கள் தங்கள் கருத்தைத் தென்னுட்டுப் பாமரமக்களுக்கு எடுத்துக் கூறமுடியும் என ஹிந்தி மொழிப் பற்றுள்ளவர்களால் கூறப்படுகின்றது. இப்பொழுதும் புலா பாய் தேசாய் போன்ற பெரியார்களின் பேச்சை நம் நாட்டு மக்கள் அறிந்தேவருகின்றனர். நம் நாட்டுப் பெரியார் பலர் வடநாடு செல்வதும் இல்லை, வடநாட்டார் நம் "தியாகி"களை மதிப்பதாயும் காணப்பட வில்லை. ஆதலால் வட நாட்டுமக்களுக்கு நம் கருத்து விளங்கவேண்டியது இன்றியமையாததெனத் தோன்றுத நிலையில் அவர்கள் கருத்துமட்டும் நமக்கு விளங்கவேண்டிய கட்டாயம் ஏனே ?

நமது தேசிய வளர்ச்சிக்கு உயிர்நாடியாய் விளங்குவது ஆங்கிலம். ஆதலால் நம்நாடு சுயராஜ்ஜியம் பெற நாம் ஆங்கிலமே கற்கவேண்டும்.

## இந்தியநாட்டின் சாதி, மதப்பிரிவினை ஒழிய ஹிந்தி உதவுமா?

ஹிந்தி நமது பழைய சாத்திரக்குப்பைகள் நிரம்பப் பெற்றதே ஒழிய ஒரு புத்துணர்ச்சி அளிக்கவல்ல ஆங்கிலத்தின் உயிர்ச் சக்தி அதில் இல்லை. ஒருகுலத்திற்கு ஒரு நீதி கற்பிக்கும் சாத்திரங்களே ஆண்டு உள. இராமாயணம், மகாபாரதம் தவிர ஏனைய சிறப்புப்பெற்ற காவியங்கள் அதில் இருப்பதாகத் தெரியவில்லை. நம்மை இன்னும் சாதி

மதம் என்னும் கட்டுபாட்டுக்களுக்காளாக்கி நம் ஆண்மையை அழிக்கும் சக்திதான் ஹிந்திக்கு உண்டே ஒழிய ஆங்கிலம் போல் கட்டுப்பாடுகளை விட்டு நீக்கிச் சுதந்தர உணர்ச்சி அளிக்கக்கூடிய சக்தி ஹிந்திக்கு இல்லை.

## நமது ஏழ்மை நிலையை ஹிந்தி போக்குமா?

நம் ஏழ்மை நிலைக்குப் பல காரணங்கள் உள. அவைகளை ஆராயப்புகின் அதுவே ஒரு தனிக் கட்டுரையாய் விடும். நம் ஏழ்மைநிலை ஒழிய வேண்டுமானல் வியாபாரம் செழிக்கவேண்டும்; வேளாண்மை உயரவேண்டும்; கைத்தொழில் சிறக்க வேண்டும்.

அயல்நாட்டு வியாபாரம் (Foreign Trade) செழிக்க வேண்டுமானல் நமக்கு ஆங்கிலம் தெரிந்தே தீரவேண்டும். நம் சென்னை நகரின் பல பெரிய வியாபாரிகளைக்கவனியுங்கள். சென்ற 25 ஆண்டுகளுக்குள் சென்னையின் பெரிய கடை வீதிகளில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைச் சற்று சிந்தியுங்கள். சென்னைவாசிகள் வியாபாரமிழந்து பிற மாகாணவாசிகள் வியாபாரத்தைக் கைப்பற்றி உள்ளதைக் காண்பீர்கள். காரணம் என்னை? ஆங்கில அறிவை வியாபாரத்திற் செலுத்தாததே அன்றோ? எங்குப் பொருள்கள் உற்பத்தியாகின்றன; எங்கு நம் பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும் என்பதை அறியாமையே அன்றோ? உலகில் வியாபாரத்தில் தலைசிறந்து விளங்கும் நாடுகள் ஆங்கிலத்திலேயே தங்கள் வியாபாரத்தை நடத்துகின்றன. நாம் ஜர்மனிக்கு ஹிந்தியில் கடிதம் எழுதுவதைக் காட்டிலும் ஆங்கிலத்தில் எழுதுவது நன்மை அல்லவா என்பதைச் சிந்தியுங்கள்.

வேளாண்மை உயர்வதற்கும் புதுமுறைக் கருவிகளை உபயோகிப்பதற்கும் பயிர்களைப் பூச்சி முதலிய நோய்களினின்றும் காப்பாற்றுவதற்கும் விளைபொருள்களை நல்ல விலைக்கு விற்பதற்கும் வேண்டிய பல வழிகள் நிறைந்த நூல்கள் பல ஆங்கிலத்தில் திகழ்கின்றன. (Agricultural Science) என்பது நம் நாட்டிற்கு உயிர் நாடியாம். இதை நாம் ஆங்கிலத்தில் கற்றுக்கொள்வது சுலபம். ஹிந்தி ஒரு நாளும் இந்த அறிவை நமக்குப் புகட்டாது.

கைத்தொழில் சிறக்க மின்சார சக்தியை உபயோகப் படுத்த வேண்டியதாகிறது. இதற்கும் ஆங்கிலமே உறுதுணையாம் என்பதை யாரே மறுக்கவல்லார்? தொழிற்கல்வி புது முறையில் புகட்டப்பட்டால் ஒழிய தற்காலத்தைய பொருளா

தார நெருக்கடி கழிந்து நம் நாடு செழிப்புற்று மேம்பாடு அடையாது. இன்றியமையாததான இத்தொழிற்கல்விக்கு ஹிந்தி பயன்படாது.

### ஹிந்தி உலக சமுதாய வளர்ச்சிக்குத் துணையாகுமா?

இரண்டாவது மொழி பயில வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள காரணம் என்னை எனின் அகில உலக சமுதாயம் தோன்றிவரும் நிலைமையேயாம். இவ்வுலக சமுதாய வளர்ச்சிக்கு ஆங்கிலம்தான் வழிகாட்டுமே அன்றி ஹிந்தி வழிகாட்டாது. ஹிந்தி பழைய மூடப்பழக்க வழக்கங்களை, கடல் தாண்டுவது பாபம் என்பதுபோன்ற எண்ணங்களைக், கொண்டு முன்னேற்றத்திற்கு தடையாய் விளையுமே ஒழிய நன்மை பயக்காது. உலக சமுதாயம் அன்றி இந்திய தேசியவளர்ச்சிக்காவது பயன்படுமா என நடுநிலையாய் இருந்து ஆராய்ந்தால் அதற்கும் பயனளியாது என்ற முடிவிற்கே வரவேண்டியதாய் இருக்கிறது. இந்திய தேசியத்திற்கு இது போழ்து முட்டுக்கட்டையாய் இருப்பது இந்து முஸ்லீம் வேற்றுமை போன்ற மத வேற்றுமையும், தீண்டப்படாதவர் உயர்குலத்தோர் என்ற நிற வேற்றுமையுமே ஒழிய மொழிவேற்றுமை யன்று. இவ்விரண்டும் ஒழிந்து "இந்தியா ஒரு தனிநாடு; நாம் அனைவரும் இந்தியமக்கள்; இந்நாட்டு மன்னர்" என்ற எண்ணம் உண்மையில் ஒவ்வொரு இந்தியரின் உள்ளத்திலும் ஊற வேண்டுமானால் அது ஒரு புது, பொது, உயிருள்ள, மொழியால் தான் செய்ய முடியுமே தவிர ஹிந்திமொழியால் செய்ய முடியாது. ஒரு மொழி பயிலுவதினால் ஏற்படும் மாறுதல்களைச் சற்று சிந்திக்கவேண்டும். ஒரு மொழி பேசப்படுவது என்பது வெறும் வார்த்தைகளை மட்டும் பயிலுவதாகாது. அந்த மொழி பேசும் மக்களின் நாகரிகமும், பழக்கவழக்கங்களும் பயில்வதாகத் தான் முடியுமே ஒழிய, வெறும் வார்த்தைகள் பயில்வதாகாது. ஹிந்தி மொழி பேசும் மக்களின் நிலை நான் கூறவேண்டுவதில்லை. அவர்களின் பழக்க வழக்கங்களை நாம் கையாளுவதால் நிற வேற்றுமை ஒழியுமா? அல்லது மத வேற்றுமை ஒழியுமா? ஒற்றுமை உண்டாகுமா? ஆத்திரப்படாமல் சிந்தியுங்கள். நடுநிலை தவறாமல் நன்முடிவு காணுங்கள். வெல்ஷ், ஸ்காட்ச் முதலிய உள்நாட்டு மொழிகளைத் தன்னுள் கொண்டு அகில பிரிட்டானிய ஒற்றுமையை உண்டுபண்ணி, நிலைநாட்டி, அகில உலக ஒற்றுமையை வளர்க்கக்கூடிய உயர்சத்தி வாய்ந்த ஆங்கில மொழிக்கும் ஹிந்திக்கும் உள்ள தாரதம்மியத்தை ஊன்றிக் கவனியுங்கள். நாம் ஆங்கில அரசாட்சியை ஒழித்து

விடலாம்; ஆங்கிலேயர்களும் நம் நாட்டைவிட்டுப் போய்விட லாம்; ஆனால் ஆங்கிலமொழி நம் நாட்டில் இருந்தே தீரும். ஆங்கில நாட்டவரின் கலப்பால் பண்டைய பலதிறப்பட்ட சாதியினரின் தொகைக்குத் துணையாக ஆங்கிலோ இந்திய சாதியும் தோன்றியுளது. ஈண்டு அவர்களின் தாய்மொழி ஆங் கிலமாய் இருந்து வருகிறது. ஆங்கிலோ இந்தியர்கள், இந்தி யர்கள் அன்றோ? "Sons of the Soil" என்று அவர்களுக்கு உலகம் போற்றும் உத்தமராம் காந்தி அடிகள் பெயரிட்டுள் ளார்கள். இச்சாதியாரில் பல பெரியார்கள் தோன்றியுள் ளார்கள், இனித் தோன்றவும் கூடும். இவர்கள் ஆங்கிலத் தைக் கைவிடப்போவதில்லை. எனவே ஆங்கிலம் இந்நாட்டில் இருந்தே தீரும். நாம் ஹிந்தியைத் தேசமொழி யாக்கினால் ஆங்கிலம் ஒரு சாதியார் பேசும் தனிமொழியாய், 226-வது இந்திய மொழியாய், இருந்தே தீரும்.

ஆதியிலிருந்து இற்றைவரை நம் நாட்டில் குடியேறியுள்ள ஆரியர், ஹூணர், அரேபியர், பட்டாணியர், மங்கோலியர், ஆங்கிலேயர் முதலிய மக்கட் கூட்டத்தினரின் தனி மனப் பான்மை ஒழிந்து, ஆங்கிலோ—இந்தியர் உள்பட யாவருக் கும் இந்தியமக்கள் என்ற ஒற்றுமை உண்டாக, இந்திய நாக ரிகம் சிறந்து பொலிவுற ஆங்கிலம் உறுதுணையாகுமே யன்றி ஹிந்தி பயனளிக்காது.

### நமக்கு ஹிந்தி நாகரிக ஒளி காட்டுமோ?

ஒரு மொழி கற்பதால் நம் நாகரிகம் மேம்பாடடைய வேண்டும். நமக்குப் புதுக்கருத்து உண்டாகவேண்டும். சுருங் கக்கூறின் புத்துயிர் அளிக்கக்கூடியதாய் இருத்தல்வேண்டும். ஹிந்தி மொழியின் இலக்கியப் பெருமையையும் ஆங்கில மொழியின் இலக்கியப் பெருமையையும் ஒப்பிட்டுப் பாருங் கள். ஹிந்தி இலக்கியங்கள்! பண்டை நாகரிகச் சிறப்பு வாய்ந்த பாரசீக, எகிப்திய, கிரேக்க, உரோமநாட்டு, இலக் கியங்கள், தற்கால நாகரிகம்பெற்று விளங்குகின்றன. பிரான்சு, ஜர்மனிய நாட்டு இலக்கியங்கள் எல்லாம் ஆங்கில உடைபெற்று அழகுடன் திகழ்கின்றன. ஆங்கில இலக்கியக் கடலுக்குமுன் ஹிந்தி இலக்கியம் எம்மட்டு?

கல்வியின் பயன்தான் என்ன? ஏன் நாம் கல்வி கற்கவேண்டும்? கற்றனைத்தூறும் அறிவு முன்னேற்ற மடைந்து மக்கள் வாழ்வை நல்வாழ்வாக்குவதற்கன்றோ நாம் இளமை தொட்டு மிகுந்த பொருட்செலவில் கல்விகற்று வரு

கின்றோம். நாம் இவ்வாழ்வான் இன்பசுகங்களை அனுபவிப்பதற்கு (Homer, Dante, Shakespeare) போன்றபெரியாரின் பொன் மொழிகள் எத்துணைப் பயனளிக்கும் என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்.

## அமிழ்தினுமினிய நந்தமிழ்மொழிக்கு ஹிந்தியால் பயனுண்டா?

இரண்டாவது மொழி கற்பதால் தாய்மொழி புத்துயிர் பெறும் என்று மொழிவல்லுநர் பலர் பறை சாற்றுகின்றனர். நம் தாய் மொழியின் நிலையைச் சற்று ஆராய்வோம். ஹிந்தி மொழியின் கூட்டுறவால் நம் தாய்மொழியின் முன்னேற்றம் கைகூடுமா என ஆராய்வோம்.

கன்னித்தண்டமிழின் பெருமையை நமது பாவலரேறு ஆகிய பாரதி கூறவேண்டுமே ஒழிய என்போன்றோர் கூறுவது சரியன்று.

உலகம் தோன்றிய காலமுதல் இன்றுவரை இம்மொழியானது உலவி வருகின்றது. இம்மொழியில் தோன்றியுள்ள காவியங்கள் பல. இதன் இலக்கியப்பெருக்கைக் கூறுவது பண்டைப் பெருமையைப் பகருவதாகும். நம் தமிழ்மொழியின் இற்றைநிலை என்ன? தமிழ்மொழியின் நிலை சீர்குலைந்திருக்கிறது. பாரதியார் கூறுவதுபோல் புதுச்சாத்திரங்கள் தமிழில் இல்லை. இப்புதுச் சாத்திரங்களைத் தமிழில் ஆக்க ஹிந்தி பயன்படுமா? ஹிந்தியில் புதுச்சாத்திரங்கள் முதலில் இருந்தன்றோ நமக்கு அது புதுச்சாத்திரங்களை உதவவேண்டும்? புதுச்சாத்திரங்கள் நிரம்பியுள்ள ஆங்கிலமொழியினுதவி கொண்டுதான் நாம் தமிழன்னைக்குப் புத்துடை அளிக்கக் கூடும்.

நிற்க, நம் தாய்மொழி சென்ற சில நூற்றாண்டுகளாக, அதாவது மணிப்பிரவாளநடை தோன்றிய காலந்தொட்டு, சுமார் 15-வது நூற்றாண்டிலிருந்து, வடமொழிக்கலப்பால், அழகுகுறைந்து, தமிழ்என்னும் தனிமொழி ஒன்று உண்டோ என்ற நிலைக்குக்கூட வந்துவிட்டது. அணிமையில் தான் தமிழில் உரைநடை எழுதவும், தமிழின் பண்டை நூலாராய்ச்சி செய்யவும் தமிழரும் ஏனையரும் தொடங்கியுள்ளனர். இந்நிலையில் ஹிந்தி என்னும் வடமொழி தமிழ்நாட்டில் புகுவது தமிழ் வளர்ச்சியைக் குறைப்பதாகுமேயன்றி மிகுப்பதாகாது. ஆங்கிலம் தமிழ்வளத்தைப் பெருக்கும். ஹிந்தி தமிழ் முன்னேற்றத்தைத் தடைப்படுத்தும்.

பண்டை நாளில் 18 மொழிகள் பயின்ற இந்தியர்களுக்கு ஹிந்தி பயிலுவது கடினமா என்றால் அன்று என்றே கூறுவோம். பலமொழி பயிலவிரும்பும் தனிமனிதர்கள் ஹிந்தி மட்டுமன்று; பல மொழிகள் கற்கட்டும் அதைப்பற்றி யாரும் தடை கூறுவதற்கு இல்லை. ஹிந்தியைக் கட்டாயப் பாடமாகப் போதிப்பதையே நாம் கண்டிக்க வேண்டியதாகிறது. தலைபருத்து, உடல் சிறுத்து, புத்தக மூட்டையைச் சுமந்து செல்லும் தமிழ் மாணவனுக்கு ஹிந்தி என்னும் மூட்டையும் சேராது இருக்கவேண்டும் என்பதே எம் வேண்டுகோள்.

நகராண்மை, நாட்டாண்மைக் கழகங்களிலும், கல்வித் துறையிலும் உழைத்துவரும் பலபெரியார்களும் நன்றாக நடுநிலை கொண்டு ஆராய்ந்து இந்திய நாட்டிற்குப் பொதுமொழியாய் இருக்கக்கூடியதும், இருந்து நன்மை பயக்கவல்லதும் ஆங்கில மொழியே எனக்கண்டு ஹிந்தியை ஒதுக்குமாறு செய்ய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

---

"இந்து" நாட்டாளின் ஜனவரித் திங்கள் 27-ம் நாளிதழில் பண்டிதர் சுந்தரலால் என்பவர் ஹிந்தி மொழிப் பயிற்சியைத் தென்னிந்திய மக்கள் இந்து முஸ்லீம், பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார், காங்கிரஸ்காரர்கள் அரசாங்க அலுவலாளிகள் ஆகிய எல்லோரும் வேற்றுமையின்றி ஒருமனப்பட்டுப் பரிந்து விரும்புகிறார்கள் என்று எழுதியுள்ளார். தமிழ் மக்களே! இது நன்மைக்கா அல்லது அதன் மறுதலைக்கா என்பதை நீங்களே ஆராய்ந்து சிந்தியுங்கள்!

(ஆர். சே. சே.)

# ஆராய்ச்சிப் பகுதி-Research

## சதுரங்கம்

[இராவ்சாஹிப் C. M. இராமச்சந்திரஞ் செட்டியார் அவர்கள்]

(கசகூ-ம் பக்கத் தொடர்ச்சி)

சரித்திர நிபுணர்கள் இவ்வாட்டம் இந்தியாவில்தான் ஆதியில் ஏற்பட்டதென்கிறார்கள். ஆனால் கிரீக்கர், ரோமர், பாபிலோனியர், எகிப்தர், யூதர், பாரசீகர், சீனர், அரேபியர், ஐரிஷ் முதலிய பல வகுப்பார்கள் தாம் தாம் இவ்வாட்டத்தை ஆதியில் சிருட்டித்தோம் என்று பெருமை பாராட்டிக் கொள்ளுகிறார்கள். சில நூலாசிரியர்கள் இன்ன மனிதன் தான் இவ்வாட்டத்தைச் சிருட்டித்தவன் என்று எடுத்துச் சொல்லுவதுண்டு. ஆனால் அக்கதைகளை நாம் நம்புவதற்கு இடமில்லை. முதல் முதலாக சர். வில்லியம் ஜோன்ஸ் என்ற சம்ஸ்கிருதம் கற்ற ஒரு ஆங்கிலேயர்தான் இவ்விளையாட்டு ஆதியில் இந்தியாவிலிருந்து மற்ற நாடுகளுக்குச் சென்றது என்று எழுதினார். அவர் 1783-'89 ஆண்டுகளில் இந்தியாவில் பெரிய உத்தியோகத்திலிருந்தவர். வடமொழியில் பாண்டித்யம் வாய்ந்தவர். பவிஷ்ய புராணத்தில் இவ்விளையாட்டைப் பற்றிச் சொல்லி இருக்கிறதாக எழுதியிருக்கின்றார். ஆனால் பவிஷ்ய புராணத்தில் சொல்லியிருக்கும் ஆட்டமானது சிறிது மாறுபட்டது. நான்கு பேர் குறுக்களவாகக் கோடுகள் இட்ட ஒரு பலகையில் கவறுகளைக் கொண்டு விளையாடும்படியான ஆட்டத்தைத்தான் அப்புராணத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அதில் வியாசர், யுதிஷ்டிரருக்கு இவ்வாட்டத்தைக் கற்றுக் கொடுத்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதுவே யுதிஷ்டிரரும், சகுனியும் ஆடின ஆட்டமாக விருக்கும். அப்படியெனில் அது சூதாட்டமே தவிர சதுரங்கமாயிருக்காது. இவ்விதமான அபிப்பிராயத்தைப் பின்னொரு ஆசிரியர் எழுதி ஜோன்ஸ் எழுதினதை மறுத்திருக்கிறார். ஒரு பெரிய பண்டிதரான இராதா காந்தர் என்ற வங்காளக் கவிஞர் சதுரங்கம் பழைய தர்ம சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறதென்றும், அதை முதல் முதலில் கண்டுபிடித்தது இலங்கை அரசனான இராவணனுடைய பட்ட மகிஷியான மண்டோதரி என்றும், திரேதாயுகத்தில் இலங்கையை இராமன் முற்றுகை இட்டகாலத்தில் தன் கணவனான இராவ

ணை யுத்தக் கவலையினின்றும் விலக்கி உல்லாசப்படுத்துவதற்காக மண்டோதரியானவள் அதைக் கண்டு பிடித்தாள் என்றும் கூறுகிறார். ஆகவே, இவ்விளையாட்டு மிகவும் பழைமையானது என்பதில் சந்தேகமில்லை. மேலும் இந்தியாவில்தான் இவ்விளையாட்டு ஆரம்பமானது என்று எல்லா ஆராய்ச்சியாளர்களும் ஒத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆறாவது நூற்றாண்டில் சதுரங்கம் இந்தியாவிலிருந்து பாரசீகத்திற்குச் சென்றது. இச்செய்தியை பர்தூசி (Firdusi) என்ற பாரசீகக் கவிஞர் தமது சரித்திர சம்பந்தமான காவியமாகிய 'ஷா நாமா' என்னும் நூலில் எழுதி யிருக்கின்றார். பாரசீகத்தில் நவ்சிரவான் என்ற ஒரு கீர்த்திபெற்ற மன்னன் 6-வது நூற்றாண்டில் ஆண்டனன். அவன் காலத்தில் இந்து தேசச் சக்கரவர்த்தி சில தூதர்களை அம்மன்னனிடம் அனுப்பினான். அத்தூதர்கள் தங்களோடு சதுரங்கப் பலகையையும் கொண்டு சென்றார்கள். பாரசீக மன்னர் அவ்வாட்டத்தினுடைய நுட்பங்களைத் தெரிவித்தாலன்றிக் கப்பங் கட்டிவர வேண்டுமென்று இந்தியச் சக்கரவர்த்திக்குச் சொல்லி அனுப்பியிருந்தார். அப்போதுதான் முதல் முதலாகச் சதுரங்கமானது பாரசீகத்திற்குச் சென்றது.

பாரசீகர்கள் தங்களுடைய பாஷையில் சதுரங்கம் என்று எழுத முடியவில்லை. அம்மொழியை அவர்கள் சத்ரஞ் என்று மாற்றி விட்டார்கள். இது வரைக்கும் பாரசீக பாஷையில் இவ்வாட்டம் அச்சொல்லாலேயே வழங்கி வருகிறது.

பிறகு 7-வது நூற்றாண்டில் அராபியர்கள் பாரசீகத்தை ஜெயித்தபோது இவ்வாட்டத்தைத் தெரிந்து கொண்டார்கள். 8-வது நூற்றாண்டில் அராபியர்கள் இவ்வாட்டத்தைப் போற்றி வந்த செய்தி சரித்திரத்தினால் அறிகிறோம். பாக்தாத் நகரத்துப் பெயர்போன காலிஃப் ஆன ஹரூன்-அல் ரஷீது என்ற மன்னனுக்கும் பைஜான்டின் (Roman) சக்கரவர்த்திக்கும் நடந்த கடிதப் போக்குவரத்திலும் சதுரங்கக் காய்களை உவமைகளாகக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே சதுரங்கமானது உரோமானிய நாட்டிலும் அப்போது பரவ ஆரம்பித்தது.

அராபியர்கள் ஸ்பெயின் தேசத்தைப் பிடித்து ஆண்ட காலத்தில் ஸ்பானியர்கள் சதுரங்க விளையாட்டைத்தெரிந்து கொண்டார்கள். பிறகு ஸ்பெயின் தேசத்திலிருந்து வடக்கே பிரான்ஸுக்கும், இங்கிலாந்துக்கும் இவ்வாட்டம் சென்றது.

மேலும் கிறித்துவ சமயஸ்தலமாகிய எருசலம் என்ற ஊரைத் துருக்கியர்கள் பிடித்ததைக்கண்டு கிறித்துவ நாடுகளி லுள்ள கிறித்துவர்க ளெல்லோரும் ஒருங்கு சேர்ந்து அவ் வூரை மீட்பதற்காகப் பலதடவைகளில் படை எடுத்துச்சென் றார்கள். அப்படை யெடுப்புகளுக்குக் க்ரூசேட் (Crusade) என்றுபெயர் அப்படை எடுப்புகளில் சென்ற கிறித்துவப் போர் வீரர்கள் இவ்விளையாட்டைக் கற்றுக்கொண்டு மேற்கு நாடுகளில் புகுத்தி விட்டார்கள். சில பாதிரிமார்கள் இதனைச் சூதாட்டம் என்று சொல்லித் தடுத்தும் இருக்கிறார்கள். இங்கி லாந்து தேசத்தில் வில்லியம் I ஹென்றி I, ஜான் முதலிய அரசர்கள் இவ்வாட்டத்தில் பிரியம் வைத்திருந்தார்கள் என்று சொல்லப்படுகிறது. இங்கிலாந்து தேசத்துப் பிர புக்கள் சிலர் இக்காய்களைப்போல உருவங்களைத் தமது கொடி களிலும் எழுதியிருந்தார்களாம். இவ்விதம் இந்தியாவி லிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இவ்வாட்டம் செல்வதற்கு வெகுகாலம் ஆனபடியினால் ஆட்டத்தில் பலவித மாறுதல் களும் ஏற்பட்டு விட்டது இயல்பு அல்லவா?

15-வது நூற்றாண்டு முதல் ஐரோப்பிய நாடுகளில் இவ் வாட்டம் அதிகமாகப் பரவ ஆரம்பித்தது. ஷாமாத், என்ற பாரசீக வார்த்தை ஆங்கில பாஷையில் (Check) செக் என்றும் (Mate) மேட் என்றும் மாறிவிட்டது. இதைப் போல மற்ற ஐரோப்பிய பாஷைகளிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு விட்டன. பல பெரிய மனிதர்கள் இவ்வாட்டத் தில் நிபுணர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய சரித்திரத்தைச் சொல்லப்புகில் மிகவும் நீளுமாகையால் இங்கே எடுத்துச் சொல்லவில்லை.

இவ்விதம் இந்தியாவிலிருந்து இவ்வாட்டம் மேல் நாடு களுக்குச் சென்றிருக்குமானால் நமது தென்னாட்டிலும் தமிழ் மொழியிலும் இதைப்பற்றி வழங்கி வந்து இருந்ததா என்ற கேள்வி பிறக்கும். சதுரங்கம் என்ற பெயர் வட மொழி. அதற்குத் தகுந்த தமிழ்ப்பெயர் இல்லை. ஆகவே இவ் வாட்டம் ஆரியர்களிடமிருந்து தமிழர்களுக்குச் சமீப காலத் தில்தான் வந்திருக்க வேண்டும். தமிழ் மொழிகளிலும் இவ் வாட்டத்தைப்பற்றி விவரம் சொல்லப்பட்டதாகத் தெரிய வில்லை. நளவெண்பாவிலும், வில்லிபாரதத்திலும் சூதாட்டத் தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறதே ஒழிய சதுரங்கத்தைப் பற்றிச் சொல்லப்படவில்லை. நிகண்டுகளிலும் இப்பெயரைக் காணோம். சதுரங்கம், சாதுரங்கம் என்ற பெயர்கள் வரும்போ

தெல்லாம் நால்வகைச் சேனைகள் என்ற பொருளிலேயே புலவர்கள் எடுத்தாண்டிருக்கின்றார்கள். நளவெண்பாவில் 'சாதுரங்கம் என்றேன்' (கலித்தொடர் காண்டம் செ. 49) என்றதிலும் வில்லிபாரதம் 'சாதுரங்கமும் தந்திரத் தலைவரும் தரணி மன்னனும் சூழ' (சூதுபோர் சருக்கம் செ. 76) என்றதிலும், சாதுரங்கம் என்பதை நான்குவித சேனைகள் என்றே கொண்டிருக்கிறார்கள். தாயுமானவரும் "சதுரங்க சேனையுடனே" என்றுதான் சொல்லியிருக்கின்றார், மன்னர்கள் ஆடினதாகச் சொல்லும் விளையாட்டுகளிலெல்லாம் கவறு அல்லது சொக்கட்டான் கொண்டு விளையாடும் சூதாட்டமே குறிக்கப்பட்டுள்ளது. சதுரங்க ஆட்டம் தமிழ் வழக்கத்திற்குப் புறம்பாக இருந்திருக்க வேண்டுமென்று யூகிக்கலாம்.

---

## மாமண்டூர்க் குகைக் கோயில்கள்

[தமிழாசிரியர் திருவாளர் கி. சாமிக்கண்ணு அவர்கள்]

உயர்வற வுயர்நலமுடைய முழுமுதற் பொருளாகிய கடவுள், நிலனிடை விசும்பிடை யவரவரறி வறிவகையி னுருவங் கொண்டு முருவின்றியு மமைந்துலகோர் மயர்வற மதிநல மருளிக் கொள்ளக் குறைவிலன் வேண்டிற்றெல்லாந் தருங் கோதில்சீர்ப் பெம்மானாயுள்ளமையை; ஊரகத்துநின்றும் பாடகத் திருந்தும் வெஃகாவிற்கிடந்தும் ஒருமாவடியிற்றிகழ்ந்தும் காமக்கோட்டத்துக் காமக்கண்ணியாய்க் காட்சியளித்தும் பேரருளாளனாக எழுந்தருளியும் விளங்கும்முகத்தா னறிவுறுத்தும் பெருஞ்சிறப்பினைப் பெற்றுள்ள குளனார் கழனி சூழ் கச்சிமாநகரம், காஞ்சிபுரம் எனவும் அழைக்கப்பெற்று வருகின்றது.

கச்சிமாநகரிலிற்றைக் காயிரத்து முந்நூற்று முப்பத்தைந்தாண்டுகளின் முன்றொடங்கி யிருபத்தைந்தாண்டுகள் (கி. பி. ௬௱ முதல் ௬௱௨௰௫. வரை) ஆண்ட மன்னன் மகேந்திரப் போத்தரையனாவான். இவனுடைய தந்தை நரசிம்ம விட்டுணுவர்ம பல்லவன்; இவன் தாய் ஒரு தமிழ்ப்பெண். பல்லவவேந்தர்களுளிவனே முதன்முதலாகப் போத்தரையர் என்றபட்டங்கொண்டவன். இவன்றன்னாட்சிக் குட்பட்டிருந்த தொண்டைநாடு, சோணாடு, கொங்குநாடு, கோதாவரிக்கரையிலிருந்து கடலைத்தழுவியுள்ள தெலுங்குநாடு, மகாநதிக்குத் தெற்குங் கோதாவரிக்கு வடக்குங் கடலோரமாயிருக்குங்

கலிங்கம் ஆகியவைகளிலிருந்த காடுகளை யழித்து நாடுகளாய்ச் செய்து மக்களுக்கு நன்மை புரிந்து, தனக்குந் தன்குடிக்குங் காடுவெட்டி, காடவர் என்ற பெயர்களேற்படுமாறு செய்து கொண்டான். அக்காலத்தில் வட இந்தியா முழுவதையுமொரு குடையின் கீழ்க்கொணர்ந்த அர்சதேவனைப் போரிற் றோற்கடித்த வீரனும், நிசாம் நாட்டிலழிந்து சிற்றூராக விப்போதிருப்பதும் ஆரியத்தில் வாதாபியென்றும், மகாராட்டிரத்தில் பாதாமியென்றுந் தமிழில் வாதாவியென்றும் பெயருடைய தலைநகரிலிருந்தாண்டவனுமான தோள்வலியுடைய சளுக்கிய குடியினனான இரண்டாம் புலிகேசி யென்பவன் காஞ்சிபுரம் மதிலுள் புகவியலாது வடக்கு முகமாய்த்திரும்பினவுடனவனைப் புல்லலூரில் வென்று விரட்டியடித்தபின் நாட்டை யமைதியுடனாண்டான். அக்காலத்தில் மிக்க செல்வாக்குடன் மிகப் பரவியிருந்த சமண நெறியில் முதலிலிருந்து அப்பரைத் துன்புறுத்தியவனாயினும் பின்னரவராற் சிவனடியானாகி யொளிமங்கித்தாணிலையடைந்திருந்த இறைநெறியை யுயர்நிலைக்குக் கொணர்ந்த பெரியோன்; தமிழர் படித்துள்ளுருகி யுய்வதற்குதவுந் தமிழ்மறையாந் தேவாரம் பாடப்பெற்ற காலத்தவன்; திருவதிகையி லிறைவனுக்குக் குணதரவீச்சுரமென்ற சுடுமண் கோயிற்கட்டினவன். பகைவர்க்கிடி எனப்பொருள்படும் 'பகாப்பிடுகு' எனுந்தெலுங்குப்பட்டமும், கோயில்கள் கட்டுவித்ததால் சேத்தகாரி என்றபட்டமும், சித்திரவேலைகள் செய்வித்ததால் சித்திரகாரப்புலி என்ற பட்டமும், பாட்டில் மிகவூக்கமுமறிவும் பெரும் பயிற்சியுமுடைய புலவனாக விருந்ததாலும், தன்காலத்து மக்களின் நடைகள் வழக்கங்களாகிய வாழ்முறைகளைக்காட்டி மத்த விலாசப் பிரகசநம் என்றோர் நகைச்சுவை செறிந்த நாடக மியற்றியுள்ளமையாலும் மத்தவிலாசன், அநித்தியராகன், புதுவதுபுனைபவனெனப் பொருள்படும் விசித்திரசித்தன் என்றபட்டங்களும், குணபரன், அவனிபாசன பல்லவன், லலிதாங்குரன், நரேந்திரப் போத்தரையன், சத்துருமல்லன், நயபரன், மகேந்திரவிக்கிரமன், கலகப்பிரியன், புருடோத்தமன், நரவாகனன், உதாரசித்தன், பிரகிருதிப் பிரியன், அலுப்தகாமன், நிரபேட்சன், சத்தியசந்தன், சிவிபுண்டுண்டு, நில்விலோ நய்யம்பு, பசரம்பு ஆகிய தெலுங்குப் பட்டங்களும் ஆரியப் பட்டங்களும் பெற்றிருந்தான். ஆரியமொழியினுரைநடை, எழுத்துநடையென்ற இருவகைத்தான பிராகிருத, சம்ஸ்கிருதங்களிலழகிய செய்யுள்களுமினிய நாடகங்களு மியற்றினவன். தமிழர் ஆரியம் பயின்றம்மொழியிலரிய நூல்களியற்றுமாறு வழிகாட்டினவன். குளங்கள்

வெட்டிக் குடிகளுக்கு வளப்ப மேற்படுத்தியவன். தமிழக மெங்குங் கல்லுளிவேலை பரவச்செய்தவன்.

மகேந்திரப் போத்தரையன் காலம் வரையிற் கிருட்டிணை யாற்றுக்குத்தெற்கிற் சுடுமண்ணாலும் மரத்தாலுமன்றிக் கற் கோயில்கள் கிடையா. இவன்றான் முதன்முதற் கற்கோயில்க ளமைத்தான். இவன் கற்களையடுக்கிக் கோயில்கள் கட்டவில்லை; மலைகளைக்குடைந்து செய்வித்தான். இக்கோயில்களைக் குகைக்கோயில்களென்றே சொல்லவேண்டும். இவற்றுட் சில அருகனுக்குஞ், சில இறைவனுக்குஞ், சில திருமாலுக்குமாக வமைந்துள்ளமையா லிவன் எந்நெறியிலுங் காழ்ப்பின்றி யொத்தபற்றுடையவ னென்றுய்த்துணரலாம்.

காஞ்சிபுரத்துக்குத் தெற்கே வந்தவாசிக்குச்செல்லும் பெருவழியி னுலரை நாழிகைத்தொலைவில்(முக்கால்நாழிகைத் தொலைவு=ஒரு மைல்) மாமண்டூர் இருக்கிறது. அதற்குத் தென்மேற்கேயிருக்கும் நரசிங்கபுரத்திலுள்ள மலையில் மகேந் திரப் போத்தரையன் செய்வித்த ஐந்து குகைக்கோயில்கள் விளங்குகின்றன. இக்குகைக்கோயில்களெல்லாம் மலைச் சாரலிற் குடைந்து செய்தவை. மலையுச்சியிலுமில்லை, மலையடி யிலுமில்லை, மலையினதடிக்கும் முடிக்கும் நடுவிலிருக்கின்றன. பருத்ததூண்கள் கீழும்மேலும் சதுரமாயும், நடுவில் மூலை செதுக்கப்பெற்று மிருக்கின்றன. தூணினுயர மேழு முழம். மேற்சதுரமுங் கீழ்ச்சதுரமு மீரிரண்டுமுழம். திறமையான சிற்றுளிவேலைகளுடையவை; அழகிய தோற்றமுடையவை

இவற்றுள் முதலாவது குகைக்கோயில் கிழக்கு நோக்கி யுள்ளது. இதில் முன்கட்டும் (முன்மண்டபம்) ஓர் உள் ளிருக்கை (கர்ப்பகிருகம்) யுமிருக்கின்றன. உள்ளிருக்கையில் கடவுளுருவம் (விக்கிரகம்) இருந்த பள்ளமிருப்பதன்றி யிப் போதுருவ மெதுவுமில்லை. இதிலுள்ள தூணின் சதுரத்தில் மட்டும் தாமரைப்பூச் செதுக்கப் பெற்றிருக்கிறது. இதன் றென்சுவரிற் றமிழ்க்கல்வெட்டொன் றுளது.

இரண்டாவது குகைக்கோயில் முதற்கோயிலின் றென் பக்கமிருக்கிறது; கிழக்கு நோக்கியிருக்கிறது. இதில் முன்கட்டும் மூன்று உள்ளிருக்கைகளு மிருக்கின்றன. நடு விலுள்ள உள்ளிருக்கையில் மட்டுமொரு சிவலிங்கமிருக்கிறது. மற்றைய இரு உள்ளிருக்கைகளிலுங் கடவுளுருவங்களிருந்த பள்ளங்களிருக்கின்றன. உள்ளிருக்கையின் வாயிலின்பக்கத் தில் வாயிற்காவலருருவங்கள் செதுக்கப்பெற்றுள. வாயிற்

காவலர் தலையில் மகேந்திரன் காலத்தைய வுயர்ந்த தலைப் பாகையிருக்கிறது. வாயிற்காவலர் வலதுகையை யிடதுகை மேல்வைத்தும் இடதுகையொரு பெருங்கதையைப்பிடித்து முடலதன் மேற் சாய்ந்தும் பார்ப்போரை யடிப்பார்போற் றோன்றுகின்றனர். இதன் றென்சுவரிலொரு தமிழ்க்கல் வெட்டும் வடசுவரிலொரு தமிழ்க்கல்வெட்டு மிருக்கின்றன. இக்கல் வெட்டுக்களும் முதற் கோயிலினுள்ள கல்வெட்டு மேழாம் நூற்றாண்டிலெல்லோரு மெழுதிய தமிழ் எழுத்துக் களாலெழுதப்பெற்றவை. இடையிடையே கல்லுடைந்துள தாற்றொடர்ச்சியாய்ப் படிக்கவியல வில்லை.

மூன்றாவது குகைக்கோயில் இரண்டாவதன் றெற்கில் கிழக்கு நோக்கியிருக்கிறது. இது மிகப்பெரியது. முன் கட்டு மொன்பதுள்ளிருக்கைகளு மிருக்கின்றன. இப்போதவற்றிற் கடவுளுருவங்க ளெதுவுமில்லை. ஆனால், இருந்த சுவடுஞ், சுவரிற் கல்லுருவங்களொட்டப் பெற்றோவல்லது செதுக்கப் பெற்றோஇருந்திருக்க வேண்டுமென்றாகிக்க இடந்தருமடை யாளங்களுமுள்ளன.

நான்காவது குகைக்கோயில் மூன்றாவதனோடியைந்ததன் றென்புறந் தென்றிசை நோக்கி யொரு கட்டுமட்டு முடையதா யிருக்கிறது. இதுவே மிகச்சிறியது.

ஐந்தாவது குகைக்கோயில் நாலாவதன் றெற்கே கிழக்கு நோக்கி யொரு கட்டு மட்டு முடையதாயிருக்கிறது.

இக்குகைக் கோயில்களெல்லா மரசியலாரின் கண்காணிப் பைப் பெற்றுள்ளன. எனினும் எஞ்சியுள்ளவைகளையாவது மேலும் மேலுங் கேடுறாதவாறுங் குப்பையு மழுக்குஞ் சேராத வாறும் பாதுகாத்துப் போற்றுதல் விரும்பத்தக்கதாகும்.

இவையன்றி மலைமேலிரண்டு கோயில்களுள. இவை கற்களையடுக்கிக் கட்டப்பெற்றவை. இவை மகேந்திரப் போத் தரையனுக்குப் பிற்பட்ட காலத்திற் கட்டப்பெற்றிருக்க வேண்டும். இவை மூன்றாண்டுகளின்முன் னொரு பெரியா ராற் புதுப்பிக்கப் பெற்றுள்ளன. இவற்றுள் வடக்கிலுள்ள கோயிலில் முன்கட்டு முள்ளிருக்கையு மிருக்கின்றன. உள் ளிருக்கையில் ஓசைதருங் கல்லில் மிக அழகாய்ச் செய்யப் பெற்றுள்ள வடுகநாதன் றென்முகம் நோக்கி நின்ற திருக் கோலத்தோடுள்ளார். அவர தூர்தியாகிய நாய் மேற்குப்புறந் தலையமையப்பெற்று வடுகநாதனின் பின்புறம் நிற்கின்றது. தெற்கிலுள்ள மற்றொரு கோயிலின் கிழக்குநோக்கிய திருமுன்

னில் ஒரு சிவலிங்கமிருக்கிறது. இந்தச் சிவலிங்கத்தின் றலையின் மேற்புறந் தட்டையாயுந் தலையைச்சுற்றிச் சிறிதளவு பட்டையாகவுமமைந்துள்ளது.

ஏரியிற்றண்ணீரிருந்தாற் குகையுள் தண்ணீர் சொட்டுமாம். இக்குகைக் கோயில்களைச் சித்தர்கள் மண்டபங்களென்றும் பஞ்சபாண்டவர் குகைகளென்றும் மக்கள் வழங்குகின்றனர். எனினுமிவை வெறும் மண்டபங்களல்ல. கடவுளுருவங்களிருந்த சுவடுகளுள்ளமையா லிவை கோயில்களே. எந்தெந்த நெறியைச் சேர்ந்த கடவுளுருவங்களிருந்திருக்கலாமென்றுணர அறிஞ ராராய்வாராக.

இக்குகைக்கோயில்களுள்ள மலையைத் தெற்கிலும் மற்றொரு மலையை வடக்கிலு மமைத்திடையே கீழ்கரை போடப்பெற்றுள்ள மிக அழகிய நானூறு வேலிப் பரப்புடைய பெரிய ஏரி ஏற்படுத்தப்பட்டு முப்பத்திரண்டூர்களுக்குப் பாசனவாதாரமாயிருக்கிறது. சேயாற்றினின்றும் பாலாற்றிலிருந்தும் பாய்கால்களிவ் வேரிக்கிருந்துமவை பலவாண்டுகளாய்த் தூர்ந்து கிடக்கின்றனவாகையா லிப்போதேரி நிறைவதில்லை. இவ்வேரி நிறைந்தாலிதனைச் சுற்றியுள்ள நிலங்கள் பயிர் செய்யப்பெற்று மக்கள் பசியும் பிணியும் நீங்கி நல்வாழ்வுறுவர். அஃதில்லா திப்போதடையுமல்லல் விரைவிலொழியக்காணுமாறரசியலார் செய்யவேண்டுவதவர்கள் கடமையாகும்.

---

# சேதுபதிகளும் அவர்களுடைய நாணயங்களும்

[வித்துவசிகாமணி திரு. ப. அ. முத்துத்தாண்டவராய பிள்ளை]

(௧௬௧-ம் பக்கத்தொடர்ச்சி)

பாலைப்பிரதேசத்தில் நாடானது ஈரமில்லாத வறண்ட பூமியாய் இருக்கும். அப்பாலைக்குரிய முதுவேனில் பருவத்துடன் வறட்டுப் பனிப்பருவமுமே நடுப்பகற்காலம்போல வெயில் எரிக்கும். அப்பாலைக்குரிய கருப்பொருள்கள் பின்வருமாறு:—

தேவதை—காளி அல்லது சூரியன்.

காதலன்—விடலை அல்லது காளை.

காதலி—மீளி அல்லது எயிற்றி.
குடிகள்—எயினர் அல்லது மறவர்.
மிருகம்—செந்நாய்.
பறவை—மணிப்புறு, கருடன், பருந்து, கழுகு
நகரம்—சிற்றூர், கிராமம்.
நீர்—கிணறு, கூவம்.
மரம்—ஆசு, குரா, மரா, உலிநர், பாலை, ஓமை, இலுப்பை.
தொழில்—ஆறலைத்தல், வழிப்பறி.
முரசு—துடி.
யாழ்—பாலையாழ்.
இராகம்—பஞ்சுரம்.

பாலையாகிய வறண்ட வெப்பமான திணையில்தான் காதலர் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்தபிரிவு நிகழ்ந்த இடமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் உரிப்பொருள் இதுவே.

புறம் என்பது அன்னியதேச அரசாட்சி சம்பந்தமான பொது அல்லது இராஜாங்க காரியங்களைப் பற்றியது. பாலைக்குப் புறப்பொருள் வாகை. வாகை என்பது பகைவரை வெற்றி கொள்ளுதல். வாகைமாலை சூடுதல் வெற்றிக்கோர் அறிகுறி. தர்மயுத்தம் செய்ய பிரவேசிக்கும் வீரனுக்கு வீரசொர்க்கம் கிடைக்கக் கடவுள் அனுக்கிரகம் செய்வார் ஆதலானும், பாலை ஏனைய நான்கு திணைகளின் இழிவுதான் என்று கூறுவர். ஆகவே பாலையில் புறப்பொருள் வாகையே. வாகை—ஞானிகளையும், முனிவர்களையும் புகழ்வது என்று தொல்காப்பியர் சொல்கிறார். வாகையைப்பற்றிய குண தோஷங்களைப்பற்றி நாம் ஆராயப் புகவில்லை. இராஜ்யத்தைப் பற்றியமட்டும் மறவர்களின் கடமை என்னவென்று அறிந்து கொள்வதே நமது நோக்கமாகும்.

இராஜ்ய பரிபாலனம் அறநிலை, மறநிலை என இருவகைப் படும். இரண்டில் ஒவ்வொன்றும் மூன்று உட்பிரிவையுடையது. இவற்றுள் மறநிலையும், அதன் பிரிவுகளும் தேசத்தின் பாதுகாப்பைக் குறிக்கும். மறநிலைப்பொருளாவது பகைவர்களை வருத்தி அடையும் கப்பத்துடன் நாட்டில் வசூலிக்கும் நிலவரியையும் சேர்த்து அடையும் செல்வம். இராஜத்துரோஹிகளையும், இராஜ்யப் பாதுகாப்பிலும் பகைவர் அபகரித்துக்கொண்டுபோன நிரையைத் திருப்பிக்கொணர்தலிலும் உதவாத சேனைவீரர்களையும், ஏனையோரையும் தண்டித்தல் மறநிலை அறம் எனப்படும்.

காளையடக்கல், வில்வித்தை முதலிய வீரச்செயல் ஒன்றால் ஒரு மனைவியை அடைதலால் நேரிடும் இன்பம் மறநிலை இன்பம்எனப்படும். இவர்களில் மறவர்கள் கொடுங்கோல் அரசாட்சியுற்ற தேசத்திலிருந்து கால்நடைகளைக் கவர்தலாகிய தொழிலையுடையவர் (வெட்சி). பகைவனால் கொண்டு போகப்பட்ட கால்நடைகளை மீட்டல் (கரந்தை). தொல்காப்பியர் பின்னதை வெட்சியில் சேர்த்துச் சொல்கிறார். அயல் நாட்டுக் கால்நடைகளைக் கவர்வதும் இழந்த நிரையை மீட்டலும் முறையே அயல்நாட்டு அரசாட்சி தவறாமல் செய்தற்கும், சொந்த நாட்டைப் பாதுகாத்தற்குமே செய்த செயல்களாகும். ஆகவே இவ்விரண்டையும் ஒரு வகுப்பில் சேர்த்தலே சரி. நாம் எடுத்துப் பேசும் மக்களினத்தின் சுபாவத்தைத் தழுவி அவைகளைத் தனித்தனி ஆராய்வோம். மறவர்களில் இருவகுப்பு; வெட்சிமாலை மறவர், கரந்தைமாலை மறவர். சேர வம்சத்தைச்சேர்ந்த ஐயனாரிதனார் என்பவர் தான் செய்த நூலில் 19 தலைப்பின்கீழ் வெட்சி மறவர்களின் செயல்களைப் பற்றியும், 13 தலைப்பின்கீழ் கரந்தை மறவர் செயல்களைப்பற்றியும், விரிவாய்ச் சொல்லி யிருக்கிறார். மேற்கண்ட தலைப்புகளில் சிலவற்றைப் புறநானூற்றில், (257—265) பாட்டுகளில், பல புலவர்கள் எடுத்துச்சொல்லி யிருக்கிறார்கள். யுத்தசம்பந்தமான பழக்க வழக்கங்களைப் பற்றி, ஐயனாரிதனார் சொல்லியிருப்பதற்கும், தொல்காப்பியர் சொல்லியிருப்பதற்கும் சிறிது வேறுபாடு உண்டு. இந்த வேறுபாடு அவரவர்கள் எடுத்துச்சொல்லும் வழியிலேயே ஒழிய வேறல்ல. அவர்களது திட்டமான அனுஷ்டானத்தில் வேறுபாடு சிறிதுமில்லை.

மறவர்கள் யுத்தத்தில் பிரியமுள்ள முரட்டு வகுப்பினராய் இருந்து வந்தனர். வில்வித்தையிலும், ஈட்டி, வாள் முதலிய ஆயுதப்பயிற்சியிலும் கைதேர்ந்தவர்கள். எறிதண்டு ஆயுதத்தையும் உபயோகித்து வந்தனர். போர்த்தொழிலிலேயே அவர்கள் பொழுது போக்கி வந்தனர். பயிர்த்தொழில் அவர்களுக்குரிய தொழிலன்று. மனோதைரியம் அவர்களது விசேஷ குணமாகும். மறப்போர்வீரன் தோற்றுத் திரும்பாமல் யுத்தகளத்தில் உயிர் விட்டாலும் விடுவான். தன் அரசன் தோற்றான் என்று கேள்விப்பட்டவுடன் போர்வீரன் தன்னைக் குத்திக்கொண்டு உயிர் விடுவதைக் கேள்விப்பட்டிருக்கலாம். இவ்விஷயத்தில் மறஸ்திரீகளும் தம் புருஷர்களுக்குப் பின்னடைந்தவர்களல்லர். தாய், தன் சிறுமகனுக்குத் தானே ஆடை உடுத்திவிட்டுத் தேசப்பாதுகாப்பிற்கு அவனை

அருமையுடன் அனுப்புவாள். மேலும் பிள்ளைகளுக்குக் கதாரூபமாய், பிதாவும், பந்துக்களும் செய்துள்ள வீரச் செயல்களையும், போர்புரிந்த விதத்தையும், எப்படிக் கௌரவமாய் உயிர் நீத்தார்கள் என்பதையும், அவர்களுடைய ஞாபகார்த்தமாக உருவச்சிலைகளும், நடுகற்களும் கட்டப்பட்டிருக்கிற விதத்தையும் கூறி வீரத்தைப் புகட்டுவாள். மறம், இந்த வம்சத்தின் முக்கிய குணம். சுத்த வீரர்க்குரிய நான்கு குணங்களில் தலைசிறந்ததாகத் திருவள்ளுவர் தன் குறளில் படைமாட்சி என்ற அதிகாரத்தில் சொல்லியிருப்பது சரியல்லவா? அகம் 35, புறம் 259 வாகை 21—22, நொச்சி 9, கரந்தை 25 வால் 7—42 (Val).

மறவர்கள் உண்மையுள்ள ஜனங்கள். தங்கள் ஸ்திரீகளின் மானத்தை வெகு ஊக்கத்துடன் காக்குமியல்புடையோர். தாங்கள் கூடுமான அளவு கஷ்டத்தை அனுபவித்தாலும் அனுபவிப்பார்களேயொழிய, தங்களை ஜயித்த எதிரிகளுக்குத் தங்கள் ஸ்திரீகளைக் கப்பமாகக் கொடுத்துத் தங்களை மீட்டுக்கொள்ள மாட்டார்கள். தங்கள் மானத்தைக் காத்துக்கொள்வதில் கண்ணுங்கருத்துமுள்ளவர்கள் என்பதற்கறிகுறியாக கவரிமான் மயிர்களின் கற்றையைத் தங்கள் கைக்குடையில் கட்டியிருப்பார்கள். மறவர்கள் சிவனை வழிபடுகிறவர்களாகத் தெரிகிறது. இராமநாதபுரம் தலைவர்கள் இராமநாதசுவாமிசகாயம் எனக் கையொப்பமிடுவார்கள். அவர்களது சைவமதப் பற்றுக்கு, இராமேசுவரம் கோவில் முதலிய சிவன் கோவில்களைக் கட்டியதும், பழுதுபார்த்து வந்ததும் சிறந்த சான்றாகும். தமிழகத்தின் முக்கிய தெய்வமாகிய முருகன் அவர்களால் மிகுதியும் பூசிக்கப்பட்ட போர்க்கடவுளாவர். அவர் பேராலேயே கூத்துக்களும் நடைபெறும். ஆண், பெண் இருபாலரும் அக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள். குலதெய்வமாயும் தங்கள் வீர சௌரியத்துக்குக் காரணகர்த்தாவாயுமுள்ள துர்க்கை பூசையை ஒருசமயமும் மறப்பதில்லை. பிற்காலத்தில் முகம்மதியர்களின் ஹிம்ஸையினின்றும் விஷ்ணு ஆலயங்களைக் காப்பாற்றும் நிமித்தமாகவும், குருந்தடி நம்பியின் கூட்டுறவாலும் மதுரை நாய்க்கர்களின் ஆதரவின்கீழ் இருந்ததாலும் வைஷ்ணவ மதத்தில் பற்றுள்ளவர்களாகச் சொல்லலாம்.

வெட்சி மறவர்கள் கொள்ளைக்கூட்டத்தார். பெரும்பாலும் திக்கற்ற பிரயாணிகளை வழிமறித்துக் கொள்ளையடித்தும், அரணில்லாக்கிராமங்களை அழித்தும், ஆடுமாடுகளைக் கவர்ந்தும் வந்தனர். சிலவேளைகளில், குறிப்பிட்ட

பரிசை உத்தேசித்து அரசர்களின்கீழ் ஊழியஞ்செய்தும் வந்தார்கள். தனிப்பட்ட பேர்களும் அவர்களை வேலையில் அமர்த்திக் கொள்ளலாம். சில சந்தர்ப்பங்களில் ஒரு ஸ்திரீ யிடமிருந்து ஒரு புட்டி பெற்றுக்கொண்டு, மறவன், அவளுடைய காணமற்போன பசுவைப் பிடித்துத்தருவதும் உண்டு. (வெட்சி)

கரந்தை மறவர்கள் மேற்கண்டவர்களைவிட நாகரிகமான ஓர் உள்வகுப்பினர். தமிழ் நாட்டு மூவேந்தர்களாகிய சேர சோழ பாண்டியர்களுடைய சேனைகளில், கிரமமாய் வேலைக் கமர்வார்கள். அவர்கள் மிக்க ஆண்மையும் அஞ்சா நெஞ்சும் படைத்தவர்கள். அவர்கள் அரசர்களிடம் வைத்திருந்த அழியாத அன்பினுலும் விசேஷ நம்பிக்கையாலும், அவர்களுக்காகத் தங்கள் உயிரையுங் கொடுத்து உழைப்பதில் பெருமையுடையவர்கள். அரசர்களும், அவர்களது செய்கைகளை நன்கு மதித்து மிகுதியும் கௌரவப் படுத்தி வந்தார்கள். இந்தக் கரந்தை மறவர்கள் தாங்கள் ஊழியஞ்செய்த அரசர் பெயரால் சோழ மறவர்கள் என்றும், சேர மறவர்கள் என்றும், பாண்டிய மறவர்கள் என்றும் பிரிக்கப்பட்டனர். நாளடைவில் இந்த மறவர்கள் அரசர்களின் கீழ்க்குத்தகைதாரர்களாகி விட்டார்கள், (வாகை 30. அகம் 13-44-326 புறம் 173.)

தற்காலத்திய சேதுபதிகள், சோழகரந்தையர் என்னும் செம்பி மறவர்களின் சந்ததியார்கள். இவர்கள் முதல் முதலில் தஞ்சாவூருக்குக் கிழக்கிலும், தென்கிழக்கிலும் உள்ள பிரதேசத்தில் வசித்த குடிகள். சோழர் அதிகாரம் வலுத்துப் பரவிய காலங்களில் மறவர்களும் வலுத்து எங்கும் பரவினர். சோழர்கள் கப்பலேறி வியாபாரத்தை மேற்கொண்ட பொழுது, சோழநாட்டுக்கப்பாலுள்ள முக்கிய துறைமுகங்களுள் ஒன்று தொண்டியாகும். இலங்கைக்கு அருகாமையில் இருந்ததாலும் பாக்ஸ் ஜலசந்தியைத் தாண்டிச்செல்ல வசதியாயிருந்ததாலும் தொண்டி படைவகுப்புக்கிணக்கமான இடமாயிருந்தது. இந்த மறவர்களிற் சிலர் வியாபாரப் பாதுகாப்பின் நிமித்தம் அத்தொண்டியில் குடியேறினர்கள். அவர்கள் துறைமுகத்தில் வசித்ததால், சமுத்திர வாழ்க்கையில் இயற்கையான ஓர் பிரியம் ஏற்பட்டது. இவர்களில் ஒரு வகுப்பினருக்கு மரக்காயர்கிளை என்ற பெயரும் கிடைத்தது. மற்றவர்கள் கப்பல், தோணி மூலமாய் கடல் வியாபாரம் நடத்தியதால் கடற்பாய்ச்சி என்றும், ஆறுகளிலும், கால்வாய்களிலும் படகுதள்ளியதால் ஆற்றுப்பாய்ச்சி என்றும் பெயர் பெற்றனர். இவர்களில் சிலர் கப்பற் சேனையில் சேர்ந்தனர். சண்

டைக்கப்பல்கள், அவற்றின் முன்னணியிலுள்ள குதிரை, யானை, சிங்கம் இவைபோன்ற உருவச்சிலைகாரணமாக, பரிமுக அம்பி, கரிமுக அம்பி, அரிமுக அம்பி எனமுறையே பெயர் பெற்றன. இம்மறவர்கள் கடற்கொள்ளையை அடக்குவதிலும், வியாபாரப் பாதுகாப்பிலும் மிகுதியும் உதவி புரிந்தார்கள். அவர்கள் வட இலங்கையின்மேல் படையெடுத்துஞ் சென்றார்கள். அன்னியதேச வியாபாரத்துக்கு, கனராவுக்கு (Canara) வடக்கே, மேற்குச் சமுத்திரக் கரையைக் காட்டிலும், கொரமாண்டல் திறம் (Coramandal coast) மிக்க அனுகூலமாயிருந்தது. ஏனெனில்

1. மேலக்கடற்கரை கடற்கொள்ளைக் காரர்களால் நிரம்பியது.

2. பருவக்'காற்று' நாட்களில் கப்பல்கள் கரைக்கருகில் வரநேரிடும்.

3. கரையில் தள்ளப்பட்ட கலங்கள் துறைமுக அதிகாரிகளின் சொத்தாயின. கப்பலிலுள்ள சரக்குகளை அந்தந்தத் துறைமுகத்தின் அதிகாரிகள் கைக்கொண்டு வந்தார்கள்.

இப்பேர்ப்பட்ட பிரதிகூலங்கள் கீழ்க்கரையில் இல்லை. அதுவுமன்றிச் சில பிரத்தியேகமான அனுகூலங்களும் இருந்தன. குபசுல்கம் தவிர வேறு துறைமுகத்தீர்வைகள் கீழ்க்கரைக்கில்லை. இம்மறவர்கள் தொண்டியில் வந்து தங்கிய காரணத்தால் சிலவேளைகளில் தொண்டியர் எனப்பட்டார். (சிலப்பதிகாரம் பக்கம் 336-337). இராமர் இராமேசுவரம் கோவில் ஸ்தாபித்த காலத்தில் மன்னார் வளைகுடாவிற்குள் நீட்டிக்கொண்டிருந்த இந்தியாவின் தென்முனைப் பாகத்தைப் பாம்பன் தீவோடு சேர்க்கும் பாறைக்கரையாகிய செய்கரையை-சேதுவை-க்காக்கும் பொருட்டு தொண்டியின் அருகாமையிலுள்ள சோழ கரந்தைமறவர்களை நியமித்தார். அக்காலந் தொடங்கிச் சேதுவுக்குத் தலைவர்களாயிருப்பதால் அவர்கள் சேதுபதிகள் எனப் பெற்றனர். சேதுத்துறையில் ஸ்நானம் செய்யத் திரள்திரளாக அங்கு வந்துகூடும் பிரயாணிகளுக்கு யாதொரு தீங்கும் நேராமல் சுகமாய் யாத்திரை செய்வதற்கான பாதுகாப்புகளைச் செய்து வந்தார்கள். பிரயாணிகளில் பெரும்பாலர் ஆரியர்களா யிருந்தமையாலும் அவர்களுக்கு உதவிய காரணத்தாலும், "ஆரியர் மானங்காத்தார்" என்ற பட்டப்பெயர் பெற்றார்கள். இராமரால் ஒப்படைக்கப் பட்ட இவ்வேலை தங்கள் சொந்த ஊரைவிட்டுத் தெற்கே வெகுதூரம் மாற்றிக்கொள்ள இடங் கொடுத்தது. கடல்

யாத்திரைப் பிரியர்களானபடியால் கடற்கரை ஓரமாய்க் குடியேறினார்கள். இராமநாதபுரம் என்று தற்காலம் வழங்கும் நாட்டில் முதல் முதல் நிரந்தரமாகக் குடியேறித்தங்கிய இடம் இது என்று வைத்துக்கொள்ளலாம். மேலும் வீரபாண்டியன் என்ற பாண்டிய அரசனைக் குலோத்துங்கசோழன் சுமார் கி. பி. 1064-ல், இலங்கையை ஜெயித்தபொழுது சோழ மறவர்கள் மற்றொரு முறை தெற்கே வந்து குடியேறினார்கள்.

இந்நாட்களில் மறவர்களின் பெருமையும் கீர்த்தியும் அதிகரித்தன. அரசர்களுக்கு வலுத்த அடிமைத்தொண்டர்களாயிருந்தார்கள். குலோத்துங்கன் இறந்த பின்பு சோழ ராஜ்யம், பாண்டியராஜ்யம் என்ற பிரிவு ஏற்பட்டது. அதனாலேற்பட்ட உள்நாட்டுப் போர்களிலும், சிறு சண்டைகளிலும் மறவர்களாகிய அடிமைகள் வலிமையடைந்து தங்களைத் தனித் தலைவர்களாக ஏற்படுத்திக் கொண்டனர்.

நாமிதுவரையில் ஆராய்ச்சிசெய்ததில் மறவர்களைப்பற்றி-முக்கியமாய்ச் சோழமறவர்களைப்பற்றி-சிலவிஷயங்களைத்தவிர தொடர்ந்த சரித்திரமாய் 17-ம் நூற்றாண்டின் ஆரம்பம்வரையில் ஒன்றுந்தெரியவில்லை. சிங்கள வர்த்தமானப் பத்திரிகையாகிய மகாவம்சத்தில் நல்லூரைத் தலைநகராக வைத்துக்கொண்டு இலங்கையின்மேல் படையெடுத்துச்சென்று அங்கு ஜனங்களை வருத்தியதாக ஏழு சேதுபதி தலைவர்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறதாகத் தெரிகிறது. அது கி. பி. இரண்டாவது அல்லது மூன்றாவது நூற்றாண்டில் நடந்ததாகத் தெரிகிறது. இங்கே நல்லூரென்றது வீரவநல்லூரா யிருக்கலாமென்று யூகிக்கப்படுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் சேதுபதிகள் கலந்துங்க சோழ நல்லூர், வீரயத்தகண்டன், செம்பி, கரந்தை, வீரை, தேவை, மணவை, மழவை, புகலூர் முதலிய பல்வேறு இடங்களைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டிருக்கிறார்கள் என்று சொல்லலாம்.

ஒரு விருத்தாந்தத்தில் கி. பி. 1153-ல், பராக்கிரமபாகு காலத்தில் அவனுடைய சேனாதிபதி லங்காபுரத் தண்டநாதன் கி. பி. 1170-71ல் தென்னிந்தியாவின் மீது படையெடுத்து பாண்டியர்களை ஜெயித்ததாகவும் அப்போது சேதுபதிகளை, அடக்கியதாகவும் சொல்லப்பட் டிருக்கிறது. (அனேகமாய் இலங்கேசுரன்) அவன் இராமேசுரத்தில் ஒரு கோயிலைக்கட்டிக்கொண்டு சிலகாலம் தங்கியிருந்தான். அவன் இலங்கைக்குத்திரும்பிவருவதற்குமுன் சேதுபதிகளின் வீரத்தையும் வலிமையையும் கண்டு அவர்களைச் சுயாதிபதிகளாக்கினான்.

(தொடரும்)




## சிவஞானபோதக் கருத்து

[திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், B. A.]

பதிப்புரிமை ஆக்கியோர்க்குரியது

(உசுகூ-ஆம் பக்கத்தொடர்ச்சி)

### நான்காவது சூத்திரம் மூன்றாவது அதிகரணம்

50. ஆணவ மலமறைப்பினால் கேவல நிலையில் அறிவு விளக்கமில்லாதிருந்த உயிர், விடயங்களை அறியும் வண்ணம் அந்தக்கரணங்கள் முதலிய மாயாதத்துவக் கருவிகளைக் கூடி சகல நிலையை அடைவதாயிற்று என இரண்டாவது அதிகரணத்திற் கூறிய ஆசிரியர், அவ்வாறு சகல நிலையை அடைந்து அறிவதாகிய உயிர், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அஞ்சு அவத்தைகளையு முடையதாய் நின்று அறியும் என இந்த மூன்றாவது அதிகரணத்திற் கூறுகின்றார். இதனால் இரண்டாவது அதிகரணத்தில் இருளினால் ஒளி இழந்தகண், தனக்குக் காட்டாகிய விளக்கு ஒளியினால் பொருளைக் காணுதல் போல ஆணவமல மறைப்பினால் அறிவு விளக்கமில்லாதிருந்த உயிர் தனக்குக் காட்டாகிய அந்தக்கரண முதலிய தத்துவக்கருவிகளைக்கூடி விடயங்களை அறிவதாயிற்று என ஆசிரியர் தொகுத்துக் கூறிய உயிரின் செயலை மூன்றாவது அதிகரணத்தில் அவ்வுயிர் சாக்கிர முதலிய அஞ்சவத்தைகளையும் பொருந்தி விடயங்களை அறிகின்றது என விரித்துக் கூறுகின்றார் என்பதாயிற்று. அதிகரண இயைபும் இதனால் விளங்கும்.

51. "இனி இவ்வான்மா சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதமா யுள்ள பஞ்சவத்திதனாய் நிற்கும்" என்பது அதிகரணத்தின் மேற்கோள். இனி என்பதற்கு இரண்டாவது அதிகரணம் கூறியபின் என்று பொருள் கொள்க. இவ்வான்மா என்பது இரண்டாவது அதிகரணத்திற் கூறப்பட்டபடி அந்தக்கரணங்கள் முதலிய கருவிகளைக் கூடிய ஆன்மா (உயிர்). அவத்தைகள் சாக்கிரம் முதலியன அன்றி வேறு அவத்தைகளும் உளவாதலின் ஆசிரியர் சாக்கிரம்,

சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அஞ்சு அவத்தைகளைப் பெயராற் குறிப்பிட்டு உரைத்தனர். அவத்திதன் என்று ஆன்மாவுக்கு 'அன்' என்ற ஆண்பால் விகுதி சேர்த்து ஆசிரியர் கூறியது வடமொழி இலக்கணவழக்குப் பற்றி. தமிழ்மொழிவழக்குப்படி பஞ்சவத்தையுற்று நிற்கும் என்பது கூறப்படும். பஞ்சு என்பது அஞ்சு. தமிழ்மொழியிலுள்ள எண்ணுப் பெயராகிய அஞ்சு என்றசொல்லே பின்னர் வடமொழியில் அதிலுள்ள முதலெழுத்து-ப-ஆக மாறிப் பஞ்சு என ஆகியது. முதற்கண்ணிருந்த தமிழ்மொழியிலிருந்து பின் உண்டான வடமொழிக்குச் சென்ற சொற்களில் இச்சொல் ஒரு முதன்மையான சொல் ஆகும். அமைச் சரசேய்ப்ப என்ற உவமை அடைமொழிகளை இவ்வான்மா என்றசொற்களுக்குப் பின்சேர்த்துப் பொருளுரைக்க. மேலே கூறப்பட்டவாறு இரண்டாவது அதிகரணத்திற் சுருக்கத்துக் கூறப்பட்டது, மூன்றாவது அதிகரணத்தில் விரித்துக் கூறப் படுதலால் அவ்வடைமொழிகளை ஈண்டும் சேர்த்துப் பொருளுரைப்பது பொருத்தமாகும். அமைச்சர் படைத்தலைவர் முதலியோராய பரிசனங்களுடன் தனது மாளிகையினின்றும் வெளியே உலாப்போந்த அரசன் திரும்பிவந்து மாளிகையின் கண் புகும்பொழுது வாயில்கடோறும் தன்னுடன் வந்த பரிசனங்களிற் சிற்சிலரைக் காவலாளராக நிறுத்தி, முடிவில் அந்தப் புரத்துக்குத் தனியே செல்லுதல் போல, பஞ்சகஞ்சுகனாகிய புருடன் அந்தக்கரணங்கள் முதலிய மாயாதத்துவக்கருவிகளோடு சாக்கிரத்தானமாகிய புருவ நடுவில் விடயங்களை நுகர்ந்தும் மாயாதத்துவக் கருவிகளிற் சிலவற்றைப் பிரிந்து பிரிந்து விளங்குவதாயுள்ள சொப்பனத் தானமாகிய கண்டத்திலும் சுழுத்தி துரியத்தானங்களாகிய இதயம் உந்திகளிலும் அவத்தைகளையடைந்து சென்று சென்று அங்கங்கேயுள்ள விடயங்களை நுகர்ந்தும் துரியத்தில் பிராணவாயுவைக் காவலாக நிறுத்தி முடிவில் தனியே துரியாதீதத்தில் தன்னினின்றும் நீங்காதிருக்கு மூலப்பகுதியோடு கூடி பஞ்சக்கிலேசங்களில் மூலகாரணமாயிருக்கிற அவிச்சையை விடயித்து நிற்கும் என்பது மேற்கோளாற் போந்த பொருள் ஆகும்.

52. ஆசிரியர் கூறிய மேற்கோளைக் கேட்ட அந்தக்கரணான்மவாதி அடியில் வருமாறு தடை உரை கூறுகின்றான். கண்ணானது விளக்கொளியொடுகூடி அன்றிப் பொருளைக் காணாதது போலப் புருடன் ஆகிய உயிர் அந்தக்கரணங்கள் முதலிய மாயாதத்துவக் கருவிகளோடுகூடியன்றி விடயங்களை அறியாது என்பது பொருந்தும். அவ்வாறு அந்தக்கரணங்

கள் முதலிய கருவிகளைக்கூடிய உயிர் ஒரு தன்மைத்தாக விடயங்களை அறியுமே அல்லாமல் சாக்கிரத்தின்கண் ஐம்புலனறிந்தும் சொப்பனத்தில் ஒடுக்கமறிந்தும் சுழுத்தி துரியங்களில் உண்டியும் வினையுமின்றிக் கிடந்தும் துரியாதீதத்தில் உணர்த்த உணர்ந்தும் என வேறு வேறாக அஞ்சு அவத்தைகளை அடைந்து விடயங்களை அறியும் என்றல் பொருந்தாது.

53. அந்தக் கரணான்மவாதி கூறிய தடை உரையைக் கேட்ட ஆசிரியர் அடியிற்கண்டவாறு அமைதி உரை கூறுகின்றார்.—ஒவ்வொரு இடத்திலும் அந்த இடத்திற் கூறப்படுகின்ற உண்மையை விளக்குதற்குத் துணையாக உவமை கூறப்படுகின்றது. இரண்டாவது அதிகரணத்தில் ஆணவமல இருளினால் அறிவுவிளக்கமில்லாத உயிர்; அந்தக்கரணங்கள் முதலிய மாயாதத்துவக் கருவிகளைக் கூடி ஏக தேச அறிவு விளக்கம் அடைந்தது என்று தொகுத்துக் கூறப்பட்ட உண்மையை விளக்கும் பொருட்டு "கண் விளக்கொளி" உவமை கூறப்பட்டது. அவத்தைகள் விரித்துக் கூறப்படுகிற மூன்றாவது அதிகரணத்தில் கண் விளக்கொளி உவமை பொருந்தாது ஆதலின் "அமைச்சு அரசேய்ப்ப" என்ற உவமை பொருத்தமாயுள்ளதாகக் கூறப்பட்டது. உண்மையை விளக்குதற்குத் தக்கவாறு உவமை கூறப்படுகின்றது. இரண்டாவது அதிகரணத்தில் பொருத்தமாயுள்ளதாகக் கூறப்பட்ட கண் விளக்கொளி உவமையை மூன்றாவது அதிகரணத்தில் பொருத்தமுள்ளதாக் கொள்ளாமல், "அமைச்சு அரசேய்ப்ப" என்ற உவமையைப் பொருத்தமாயுள்ளதாகக் கொள்ளல்வேண்டும் என அறிவாயாக.

54. இன்னும் ஆசிரியர் தாங்கூறிய உண்மையை விளக்க "அதுதான் மல சொரூபத்தின் மறைந்து அரூப சொரூபியாய் நிற்றலால்" என்ற ஏதுவைக் கூறி அதனை வலியுறுத்துகின்றார். அதுதான் என்பது அவ்வுயிர்தான். மல சொரூபத்தின் மறைந்தவழி என்பது, மல சொரூபத்தின் மறைந்து எனத் திரிந்து நின்றது. ஆன்மா மல சொரூபத்தின் மறைந்து நிற்றல் இரண்டாவதுஅதிகரணத்தில் ஆன்மா சகசமலத்தினால் உணர்வின்று என்பதனால் கூறப்பட்டது. இதன் விளக்கம் மேலே இச்சூத்திரத்து 23, 24, பந்திகளிற் (Paras) கூறப்பட்டிருத்தலால் ஆண்டுக் காண்க. இரண்டாவது அதிகரணத்தில் கூறப்பட்டதை இங்கே திரும்பக் கூறுதற்குக் காரண மென்னவெனில், மலத்தில் மறைந்து நின்ற கட்டு நிலையில் ஆன்மா அரூப சொரூபியாய் நிற்குமன்றி வீடுபெற்றுழி ஆன்மா அரூப சொரூபியாய்நிற்றல் இல்லை என மாணவர் மயக்கமின்றித் தெளிவாய்

அறிதற்கு என்க. அரூப சொரூபி என்பது கலைமுதலிய சூக்குமதத்துவங்களாலாகிய பரதேக (அரு உடம்பு) வடிவத்தையுடைய ஆன்மா. தத்துவங்களோடு கூடி அறிகிற ஆன்மா, மலத்தின், மறைந்து நின்றவழி, தன்னை அத்தத்துவங்களினின்றும் பிரித்தறியாது அவற்றோடொன்றுபட்டு நின்று அத்தத்துவங்களியல்பே தன் இயல்பென மயங்கித் தத்துவவன்னரூபியாய் நிற்றலால் சில தத்துவங்களைக் கூடியும் சில தத்துவங்களைப் பிரிந்தும் அஞ்சவத்தைப் படுவதாயிற்று என்பது இந்த ஏதுவினாற் போந்தபொருள். ஆன்மா கேவல அவத்தையிலிருந்து சகல அவத்தையை ஒருசேர ஒரேகாலத்தில் அடைவதில்லை. அது சகல அவத்தையை அடைதற்கண் முதலாவது மேலே 47 வது பந்தியிற் கூறப்பட்டவாறு, தோற்று முறையில் முறையே காரண சரீரம், கஞ்சுக சரீரம், குண சரீரம் ஆகிய பரசரீரங்களைப் பொருந்தி மூலப்பகுதியோடு பிரிதலின்றி பும்சத்துவ மலமுடைய புருடனைப் போகம் நுகர்தற்குத் தகுதி உடையதாய் அரு உடம்பைச் சேர்ந்து உரு உடம்பை(தூல உடம்பு) இயக்கி விடயங்களை அறிந்து போகம் நுகர்கின்றது. இங்ஙனம் உயிர் எப்பொழுது எந்த எந்த உடலில் தங்கித் தொழில் செய்யுமோ அப்பொழுது அந்த அந்த உடல் அதற்கு இருப்பிடமாகின்றது. இவ்வாறு உயிர் மூலாதாரம், உந்தி, இதயம், கண்டம், புருவம், நடுஆகிய அஞ்சுஇடங்களிலும் முறையே சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் ஆகிய அஞ்சு அவத்தைகளையும் அடைந்து ஒவ்வொரு அவத்தையிலும் அதற்குரிய விடயங்களை அறிந்து போகம் நுகர்கின்றது. ஆதலின் உயிர் அந்தக்கரணங்கள் முதலிய கருவிகளைச் சேர்ந்து ஒருதன்மைத்தாக அறியாமல், சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் அஞ்சு அவத்தைகளை உடையதாகி நின்று விடயங்களை அறிதல், இன்றி அமையாது நிகழ்வதாகின்றது. இப்படி உயிர் எந்த எந்தக் கருவிகளைச் சேர்ந்துள்ளதோ அந்த அந்தக் கருவிகளில் வசித்துவ வியாபக முடையதாய் நின்று விடயங்களை அறிதலினால் அதற்கு உளதாகிய வசித்துவ வியாபகத்துக்கும் இழுக்கில்லை என அறிவாயாக.

55. மேலே கூறப்பட்டவாறு புருவநடுவில் சாக்கிரத்தானத்தை அடைந்து அறிவு வேட்கை செயல்கள் ஏகதேச விளக்கமுற்று நின்ற புருடன், அப்படி விளக்கமுற்று நின்றவாறே நில்லாது ஆணவமலத்தினது அதோநியாமுக சத்தியால் உந்தப்பட்டுக் கீழ்நோக்கிச் செல்லுகின்றது. அது

கீழ்நோக்கிச் செல்லுகின்ற சாக்கிரம், ஒருவன் புறத்தொழிலை விட்டு விழிப்புநிலையிலிருந்து உறக்க நிலைக்குச் செல்லுங் காலத்திலுளதாகிய சாக்கிரம் ஆகும். அப்பொழுது புருவ நடுவாகிய சாக்கிரத் தானத்தில் மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஞானேந்திரியங்கள் ரு, அவற்றின் விடயங்களாகிய ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசைகள் ரு, வாக்கு பாதம் பாணி பாயு உபத்தம் என்னும் கன்மேந்திரியங்கள் ரு, அவற்றின் விடயங்களாகிய வனம், கமனம், தானம், விசர்க்கம், ஆநந்தம் ரு. மனம் அகங்காரம் புத்தி சித்தம் என்னும் அந்தக்கரணங்கள் ச. பிராணன், அபானன், உதானன், வியானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்சயன் என்னும் பிராணவாயுக்கள் க0. புருடன் க. ஆக முப்பத்தைந்து கருவிகள் தொழிற்படுகின்றன. இக்கருவிகளன்றி சுத்தததத்துவங்கள் ரு. கலை வித்தை அராகம் காலம் நியதி ஆகிய வித்தியாதத்துவங்கள் ரு. மூலப்பகுதி க. ஆகிய பதினொரு கருவிகளும் தொழிற்படுகின்றன. அவை ஏனைய கருவிகள் போல ஓர் அவத்தையிற் கூடியும் பிறிதோர் அவத்தையிற் பிரிந்தும் தொழிற்படுதலின்றி எக்காலத்தும் புருடனோடு உடனாய் நிற்றலின் முப்பத்தைந்து கருவிகளுடன் சேர்த்து எண்ணப்படவில்லை. புருடன் தன் கீழுள்ள முப்பத்தினாலு கருவிகளைச் செலுத்துகிறதாயிருப்பினும், அதனையும் ஒரு கருவியாக வைத்து எண்ணப்பட்டது, யாது காரணம் பற்றி எனின் புருட தத்துவமுளதாதற்கு மூலப்பகுதியின் தொழிற்பாடும், கலை முதலியவற்றின் தொழிற்பாடும் மூலப்பகுதியையும் கலை முதலியவற்றையும் செலுத்துவனவாகிய அஞ்சு சுத்ததத்துவங்களின் தொழிற்பாடும் ஏதுக்களாயிருந்து அதனைச் செலுத்துதல் பற்றி என்க. இந்தக் கீழ்நோக்கிய சாக்கிர அவத்தையில் மண்முதலிய அஞ்சு பூதங்களும் அவற்றின் காரணங்களாகிய ஓசை முதலிய தன்மாத்திரைகளும் விடயங்கள் பத்தும் பிராணவாயுக்கள் பத்தும் ஒழிந்த ஒழிந்த நாற்பது தாத்துவீகங்களும் தொழிற்படா. ஆதலின் அவற்றையின்றி வலியில்லாத ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்களின் தொழிற்பாடும் மெதுவாக நிகழும். மெதுவாய் நிகழ்தல் என்பது புருடன் கண்டுங்காணாது கேட்டுங்கேளாது தீண்டியும் தீண்டாது சுவைத்துஞ் சுவையாது முரன்றும் முரலாது புறப்பொருள் விடய நுகர்ச்சியில் மேவி நிற்றல் ஆகும். பின்கண்டத் தானத்தில் நிகழ்வதாகிய சொப்பன அவத்தையில் மேலே கூறப்பட்ட முப்பத்தைந்து கருவிகளில் ஞானேந்திரியங்கள் கன்மேந்திரியங்கள் ஆகிய பத்துக்கருவிகளும் தொழிற் படாதொழிய, ஏனைய இருபத்தைந்து கருவிகளும் தொழிற்படும்

இந்த அவத்தையில் அந்தக்கரணங்கள் தொழிற்படினும் அந்தக்கரணங்களுக்குத் துணையாக நின்று வலி செய்யும் இருவகை இந்திரியங்களும் தொழிற்படாமையின் புருடன் புறப்பொருள்களை விடயித்தலின்றி அகத்தே அருவுடம்போடு (சூக்குமதேகத்தோடு) கூடிநின்று அதற்குரிய இருவினைப் பயன்களை நுகர்ந்து நிற்பதோடு கனுக்காண்டலும் செய்து நிற்கும். ஈண்டுக் கனுக்காண்டல் என்பது புருடன் நனவுலகில் (Physical World) உள்ள பொருள்களை உண்மையிற் காண்டல் முதலியன செய்து ஆண்டு உளதாகிய விடய நுகர்ச்சி செய்தல் போல, கனவுலகில் (Astral World) உள்ள பொருளை உண்மையிற் காண்டல் முதலியன செய்து ஆண்டு உளதாகிய விடய நுகர்ச்சி செய்தல் ஆகும். அது மாயாவாதி கூறும் பொய்க்கனவு அன்று. 'நனவின் பயனுங் கனவின் பயனும் வினையின் பயனவை போய்யென வேண்டா' என்று சங்கற்ப நிராகரணம், மாயாவாதி நிராகரணத்தில் 134-வது வரி கூறுதல் காண்க. பின் இதயத்தானத்தில் நிகழும் சுழுத்தி அவத்தையில் மனத்தின் விருத்தியாகிய சித்தம் க, அகங்காரத்தாற் செலுத்தப்படும் பிராணவாயு க; புருடன் க; ஆக மூன்று கருவிகளும் தொழிற்படும். இந்த அவத்தையில் ஒன்றனை நிச்சயித்தற்கு ஏதுவாகிய புத்தி தத்துவ முதலியன தொழிற்படாமையின் கனவின்கண் அறியவாராததாய் ஒன்றனைச் சிந்தித்து நிற்கும் சித்தத்தின் தொழில் மாத்திரம் நிகழும். பின் உந்தித்தானத்தில் நிகழ்வதாகிய துரிய அவத்தையில் பிராணவாயு க; புருடன் க; ஆக இரண்டு கருவிகளும் தொழிற்படும். இதில் புருடன் உடம்பிற்குக் காவலாகிய பிராணவாயு ஒன்றனையே விடயிக்கும். பின் மூலாதாரத்தில் நிகழ்வதாகிய துரியாதீத அவத்தையில் பஞ்சகஞ்சுகனுகிய புருடன் மாத்திரம் தன்னின் நீங்காத மூலப்பகுதியோடு கூடி அவிச்சையை விடயித்து நிற்கும். இங்ஙனம் சாக்கிரமுதல் கீழ்நோக்கிச் சென்று மூலாதாரத்தில் துரியாதீத அவத்தையை அடைந்த புருடன் மீள, மேல்நோக்கி மூலாதாரம், உந்தி, இதயம், கண்டம், புருவநடு என்ற ஐந்து இடங்களிலும் முறையே ஏறி ஏறிச் சென்று ஒவ்வொரு இடத்திலும் முன் கூறப்பட்ட முறைப்படி அதற்குரிய அவத்தையை அடைந்து அந்த அந்த அவத்தைக்குரிய அறிவு வேட்கை செயல்கள் விளங்கப்பெற்று விடயம் நுகர்ந்து செல்கின்றது. இவ்வாறு புருடன் மேலே நோக்கிச் செல்லுங்கால் அடையும் அஞ்சு அவத்தைகளும் கீழ்நோக்கிச் செல்லுங்கால் அடையும் அஞ்சு அவத்தைகளிற் போலவே புருடன் ஒவ்வொரு இடத்திலும் அதற்குரிய அவத்தையை

அடைந்து அதற்குரிய அறிவு வேட்கை செயல்கள் விளங்கப்பெற்று விடயம் நுகர்ந்து அதனை விட்டுச் செல்கின்றது. இந்த அவத்தையிலும் புருடன் கண்டத்தில் கனுக்காண்டலுண்டு. ஆதலின்!இவ்விருவகை அஞ்சு அவத்தைகளும் ஒரு தன்மையனவாக வெண்ணப்பட்டுக் கீழாலவத்தை என்ற ஒரே பெயராற் கூறப்படுகின்றன. அவை சகலத்திற் கேவலம் என்று கூறப்படும். ஆனல், புருடன் கீழ்நோக்கிச் செல்லுங்கால் ஒவ்வொரு அவத்தையிலும் அறிவு சுருங்கிச் சுருங்கித் துரியாதீதத்தில் அறியாமையை அடைந்து நிற்கும்; மேல் நோக்கிச் செல்லுங்கால் ஒவ்வொரு அவத்தையிலும் அறிவு பெருகிப் பெருகிச் சாக்கிரத்தில் உறக்கத்துக்குச் செல்லுங்காலத்திற் போல அறிவு மெதுவாக நிகழும்.

56. மேலே கூறப்பட்டவாறு புருவ நடுவில் சாக்கிரத்தை அடைந்த புருடன் அந்தப் புருவ நடுவி லிருந்துகொண்டே சாக்கிரம் முதல் அஞ்சு அவத்தைகளையு மடையும். இவை, சாக்கிர சாக்கிரம், சாக்கிர சொப்பனம், சாக்கிரசுழுத்தி, சாக்கிரதுரியம், சாக்கிரதுரியாதீதம் என்று கூறப்படும்; இந்த அஞ்சு அவத்தைகளுஞ் சேர்ந்து மத்தியாலவத்தை என்றும் சகலத்திற் சகலம் என்றுங் கூறப்படும். இந்த அவத்தையில் புருடன் புருவநடுவி லிருந்துகொண்டே சாக்கிரமுதலிய அஞ்சு அவத்தைகளையு மடைந்து ஒவ்வொரு அவத்தைக்குமுரிய கருவிகளால் அறிவு வேட்கை செயல்கள் நிகழப்பெற்று விடய நுகர்ச்சி செய்தல், அரசனொருவன் தன்னுடைய அத்தாணி மண்டபத்திலிருந்துகொண்டே தன் ஒற்றர், அமைச்சர், படைத்தலைவர் முதலிய பணியாளர்களால் தான் ஆளும் நாட்டின் செய்திகளை யறிந்து தன்னுடைய ஆணையைச் செலுத்துதல் போலாம். முப்பத்தாறு தத்துவக்கருவிகளும் அறுபது தாத்துவிகங்களும் தொழிற்படும் இந்த மத்தியாலவத்தையில் புருடன் ஒவ்வொரு அவத்தையிலும் ஆண்டு ஆண்டு விடயத்திற்குரிய கருவிகளால் ஆண்டாண்டு புலனுதற்குரிய விடயத்தை நுகர்ந்து விடயத்தைக் கண்ட கண்ட பொழுதே நீங்கி அயர்த்து விடுகின்றது. ஆதலின் புருடன் புருவநடுவில் நின்று ஒரு விடயத்தை அறியும்பொழுது அதனை விட்டுவிட் டறிவதல்லாமல் இடையறவின்றித் தொடர்ந்து அறியமாட்டாது. அங்ஙனம் விடயத்தை விட்டுவிட்டறிதற்கேற்ப கலை முதலிய கருவிகளைச் செலுத்தும்அஞ்சு சுத்த மாயாதத்துவங்களில் சிவதத்துவம் ஒன்று துரியாதீதத்திலும், சிவம் சத்தி இரண்டு தத்துவங்கள் துரியத்திலும் சிவம் சத்தி சாதாக்கியம் மூன்று தத்துவங்கள் சுழுத்தியிலும் சிவம், சத்தி, சாதாக்யம் மகேசுவரம் நான்கு தத்துவங்கள் துரியத்திலும்

சிவம், சத்தி, சாதாக்கியம், மகேசுவரம் சுத்தவித்தை அஞ்சு தத்துவங்கள் துரியாதீதத்திலும் செயற்படும். அங்ஙனம் செயற்படுதல் பற்றி விடயத்தின் நுகர்ச்சிதோறும் மிக்க நுட்பமாய் ஐந்து அவத்தைகளும் விரைந்து மாறிமாறிக் காற்றாடி சுழலுதல் போல நிகழும் இவ்வாறு புருடன் விடயங்களை அறியுஞ் செய்கை தோறும் ஐந்து அவத்தைகளும் மாறி மாறி நிகழ்ந்து நினைப்பும் மறப்பும் முறையே வினைப் பயன் நுகர்ச்சி (கன்ம நுகர்ச்சி)க்கும் வினைத் தேட்டத்துக்கும் (கன்ம ஆர்ச்சிப்பு) ஏதுக்களாகும்.

57. மத்தியாலவத்தையின்கண் நிகழும் ஐந்தவத்தைகளின் நுட்பமானது ஒருவன்தன் கைப்பொருளை வீழ்த்திய தனாலுண்டாகும் மூர்ச்சித்தல் முதலிய உவமைகளில் வைத்து விளக்கிக் காட்டப் படுகின்றது. ஒருவன் கையிலிருந்த பொருளொன்று தன்னை அறியாது விழ, அது விழுந்ததென அறிந்த பின் பிராண வாயு இயக்கமின்றி மூர்ச்சித்தல் துரியாதீதம், அம் மூர்ச்சை தெளிந்து சிறிது பிராணவாயு இயங்குதல் துரியம்; விழுந்த பொருள் எந்த இடத்தில் விழுந்ததென எண்ணுதல் சுழுத்தி; பொருள் விழுந்த இடம் இதுவோ அதுவோ என எண்ணுதல் சொப்பனம். விழுந்த இடத்தை இன்னது எனத் துணிந்து விழுந்த பொருளைக் கண்டெடுத்தல் சாக்கிரம்.

58. இங்ஙனம் மேலே கூறப்பட்ட இருவகை அஞ்சவத்தைகளாலும் ஆன்மாவுக்குச் சகசமலத்துணராமையினுளதாகிய கேவல காரணவத்தையின் இயல்பு கூறப்பட்டது. ஏனைய காரணவத்தைகளாகிய சகலத்தினியல்பு அஞ்சாவது சூத்திரத்திலும் சுத்தத்தினியல்பு ஆறாவது சூத்திரத்திலுங் கூறப்படும்.

---

# அறிவியற் பகுதி-Science

## தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

(The Tamil Alphabet : Its Mystic Aspect)

[திரு. பா. வே. மாணிக்க நாய்க்கர்—திரு. க. ப, சந்தோஷம்.]

முளை எழுத்தென்றும் பிரணவ எழுத்தென்றுங் கூறப்படுகின்ற குறில் உயிராகிய ஒகரம் ஏனைய தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும் விடச் சிறப்பாய்க் கருதுதற்குரியது. எழுத்துக்களின் உருவ வளர்ச்சியை உணர்ந்தோரும், பழமையாராய்ச்சிக்காரரும், கல், பட்டயம், நாணயம் முதலியவற்றிற் செதுக்கப்பட்ட சொற்களுக்குப் பொருள் காண்போரும் இவ்வெழுத் தெங்ஙனந் தோன்றிற்றென்று கூறவியலாதவர்களாயிருக்கின்றனர். இவ்வெழுத்தின் உருவம் பண்டையிலிருந்தவாறே இன்றுமுளது; வேறுபடவில்லை. தமிழ் எழுத்துக்கள் வேறு சிலவற்றின் உருவத்தைப் பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. காலம் வாய்ப்பின் இதுபற்றிப் பின்னர்க் கூறுவேன்.

(படம். 1)




முதன் முதல், முளை எழுத்தாகிய மாருத்த ஒகரம் பல் வேறுவகையில் உருமாறி அகரவெழுத்தாவதையும், பிறகு

வேறு எழுத்துக்களாகி, அடிப்படையான அடையாளங்களால் (எழுத்துக்களால்) அமைந்த மூலமந்திரங்களைத் தோற்றுவிப்பதையும், இளஞ்சிறார்க்குக் கல்விபுகட்டுந் துறையில் ஆளப்படுகின்ற முறையைப் பின்பற்றி எடுத்துக்காட்டியபின், மூலமந்திரங்களின் உண்மை இயலை விரித்துக் கூறுவேன்.

முதற்பக்கத்தில் ஒகரத்தின் இயற்கைவடிவம் தடித்த கோடுகளால் வரையப்பட்டிருக்கின்றது. இதில் மூன்று பகுதிகள் உள. இவற்றுள் அ, ப, ந என்று குறிப்பிட்ட வளைவு கருப்பையினுட் கிடக்கும் முதிராக்குழவியின் உருவத்தை யொத்தது. ந, என்ற மையத்திலிருந்து ந, ச, என்ற ஒரு சாய்வு கோடு வருகின்றது. இது குழவியின் தொப்புளை யொத்தது. மூன்றாவது பகுதி த, ச, ய, என்ற குறுக்கே செல்லுங்கோடு. இது கருப்பையின் நஞ்சை யொத்தது. இங்ஙனம் அமையும் ஒகர வடிவத்தின் வளைந்த பகுதி இருந்தவாறே இருப்ப, ந, ச, என்ற சாய்வு கோட்டையும், த, ச, ய என்ற குறுக்கு வரியையும் நேரே எதிர்ப்பக்கம் (180 டிக்கிரி) செல்லுமாறு சுழற்றுவோமாயின், ஒகரக் குறில் அகரக் குறிலாக மாறுகின்றது. இதை நோக்குமிடத்து, ஒகரத்தில் கீழ்நோக்கியும் குறுக்காகவும் செல்லுகின்ற வரிகள் அகரமாகும்போது வேறு இடங்களில் அமைகின்றன என்பதைத் தவிர்த்து, அகரத்திற்கும் ஒகரத்திற்கும் பிறவேற்றுமை ஒன்றுமில்லை என்பது புலனாம்.

(படம் 2) 


இரண்டாவது படத்தில் அகரத்தை அ, உ, ம் எனும் முப்பகுதிகளாகக் காட்டியிருக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் தெற்றெனத் தெரியுமாறு அவற்றிற்கிடையே சிறு இடைவெளிகள் விடப்பட்டிருக்கின்றன, (படம் பார்க்க) இங்ஙனம் பெற்ற மூன்று பகுதிகளையும் மற்றொரு வகையில் எடுத்தடுக்குவோமாயின், அவை ஒகரமாகின்றன. (படம் பார்க்க) அகரமென்று குறிப்பிடப்பெற்ற பகுதி ஒகரத்தின் மேலே வந்து நிற்கின்றது. இங்ஙனம் மேலே பெறப்படுங் குறியுடன் தோன்றுவதே ஒக

ரக்குறிலுக்கு வடிவமாகும்; அஃதில்லாவிடின், ஓகாரமாகும். தொல்காப்பியம் முதல் நன்னூல் வரையிலுள்ள எல்லாவிலக்கணங்களும் இதைக் கூறுகின்றன. தொல்காப்பியத்தில் இது பற்றிக் கூறும் விதிகள் இரண்டு. இவற்றுள் முதலாவது:—

'மெய்யினியல்பு புள்ளியொடு நிலையல்' என்பது

இரண்டாவது:—

'எகர ஒகரத் தியற்கையு மற்றே' என்பது. இவற்றால் எகர ஒகரமாகிய குறிலுயிர்கள் இவற்றால் புள்ளியுடன் தோன்ற வேண்டு மென்பது பெறப்படுகின்றது. இது குறித்து நன்னூல்,

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்து மாண்
டெய்து மெகர வொகர மெய்ப்புள்ளி'

என்று கூறுகின்றது. மெய்யெழுத்துக்களைப் போன்றே எகர ஒகரங்கள் புள்ளிபெற வேண்டு மென்பது இலக்கணநூலார் அனைவரும் ஏற்றுக் கொண்ட தொன்றே.

இப்பொழுது வழக்கிலிருக்கின்ற புள்ளி வட்ட வடிவமானது. ஆதலின், இலக்கணத்திற் கூறப்பட்டது இவ்வட்ட வடிவினது தானோ, அன்றி ஈண்டு நாம் கண்ட நீண்ட வடிவினதோ, அன்றி இருவடிவுங் கொண்ட ஒன்றோ என்ற கேள்வி பிறக்கின்றது. புள்ளி என்ற சொல் 'புள்' என்ற முதனிலையிலிருந்து வருவது. புள்ளைப் போன்றிருப்பது, என்பது அதன் பொருளாகும். புள் என்ற அடிக்குப் பறவை என்றாவது பிள்ளைகள் விளையாடுவதற்கு வழங்கும் ஒருசிறு கட்டை என்றாவது பொருள் கொள்ளலாம். இச்சிறு கட்டை ஒகரத்தின் மேல் அமைகின்ற நீண்ட வடிவினது. இக்கட்டையை ஏற்றவாறு கீழேவைத்து, நீண்டகோல் கொண்டு ஒரு முனையைத்தட்டிச் சிறுவர்கள் விளையாடுகின்றார்கள். இங்ஙனந் தட்டுங்காற் சிறுகட்டை பறக்கின்றது. இது குறித்துப் பறவைக்கும் இச்சிறு கட்டைக்கும் புள் என்ற பொதுப்பெயர் வந்திருக்கலாம். புள்ளி என்பது வட்ட வடிவத்தையுங் குறிக்கும். ஆதலின் இவ்விரு புள்ளிகளில் எதை எவ்விடத்தில் வழங்கவேண்டுமென்பதை ஆராய வேண்டும்.

பழைய கல்வெட்டுக்களில் தோன்றுகின்ற புள்ளி, ஈண்டு நாம் பார்க்கும், தலைவிரிந்து அடி குறுகிய வடிவினது. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நந்தி விக்ரவர்மன் காலத்தில் எழுந்த கல்வெட்டுக்கள் இதற்குச் சான்றாகும். எனினும்,

இதன் பிறகு எட்டு நூற்றாண்டளவு புள்ளி என்பது மறைந்து போய் இக்காலத்தில் வட்டவடிவினதாய்த் தோன்றியுளது. ஆதலின், பழந்தமிழர் மெய்யெழுத்திற்கு இட்ட புள்ளி நீண்ட இலிங்க உருவினதே என்று காணக்கிடக்கின்றது. இன்று எழுத்துக்களின் வடிவ மாறுதலை உங்களுக்கு யான் எடுத்துக் காட்டுமுறையிலும் இந்த இலிங்க வடிவமே தோன்றுகின்றது. இதுகாறும், ஒகரம் அகரமாதலையும், அகரம் ஒகரமாதலையும் எடுத்துக் காட்டியுளேன்.

(படம் 3)




மூன்றாவது படத்தில் அகர உயிர் முன் பகுக்கப்பட்டவாறன்றி, வேறு மூன்று பகுதிகளாகப் பிளக்கப்பட்டுளது. பகுதிகள் செவ்வனம் விளங்குமாறு இடை வெளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று பகுதிகளையும் பிரித்தெடுக்குங்கால், இலிங்கவடிவமும் உ, ம என்ற எழுத்துக்களுந் தோன்றுகின்றன. உ ம என்பது பார்வதியைக் குறிக்கும். இதனால், அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களையுந் தன்னிலடக்கிய ஓரெழுத்தாய் அகரம் விளங்குகின்றதைப் பார்க்கின்றோம். முழு எழுத்தும் அகரமாகின்றது; அதன் மேற்பாகம் உகரமாகின்றது; கீழ்ப்பாகம் தலைகீழாயமைக்கப்பட்ட மகர மாகின்றது. அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களும் பிரணவமாகிய ஓகரத்தின் பகுதிகளாதலால் அகரம் பிரணவத்தின் பகுதிகளைச் சற்றுங் குறையாது தன்னகத்தே கொண்டு நின்று, மூன்றில் ஒன்றும், ஒன்றில் மூன்றும் இலங்குவதைக் காட்டுவதுபோலுளது. அகரத்தினின்றும் நாமெடுத்த உகர மகரங்களாகிய எழுத்துக்களை

மற்றும் பிரிப்போமாயின், உ, ம், அ, என்பவை தோன்றும். (ம=ம்+அ) இங்ஙனம், பிரணவத்தில் அ, உ, ம என்ற முறையிருக்க, உ, ம என்ற எழுத்துக்களிலிருந்து மேற்குறித்த மூன்று எழுத்துக்களே வேறொருவரிசையில் உ, ம், அ, என வருகின்றன. முதல் வரிசை மகர ஒற்றில் முற்றுப் பெற்று, சிவனுடைய ஆறியிருக்கும் நிலையையும், இரண்டாம் வரிசை அகர உயிரில் முற்றுப் பெற்று சக்தி அல்லது உமையின் இயங்குகின்ற நிலையையும் காட்டுவனபோல் தெரிகின்றன. அகரத்திலிருந்து பெறப்பட்ட உகர மகரங்களாகிய எழுத்துக்களைப் பிரித்தெடுத்தபின், இலிங்கவடிவினதாகிய புள்ளி மிகுந்து நிற்கின்றது. இதை எடுத்து மகரத்தின் மேல் வைப்போமாயின் மகர ஒற்றுத் தோன்றுகின்றது. இதனால், மகரம் அல்லது மாயை, சிவன் முன் ஆற்றலொடுங்கி அடங்கி விடுமென்பது காட்டப்படுகின்றது.

சக்தி, மாயை என்ற இரண்டும் இருதலைகளும் ஒருடம்புங் கொண்ட பேருருவமென்று நூல்கள் கூறுகின்றன. இதனால் இவற்றின் இணைபிரியாமை வற்புறுத்தப் படுகின்றது. இக்கருத்து அகரத்தில் உகர மகரங்கள் இருதலைகளுடனும், ஒருடம்புடனும் அமைக்கப்பட்டிருத்தலால் விளக்க முறுகின்றது.

உகரத்தையும் மகரத்தையும் பிரிக்கவேண்டுமாயின், அகர வெழுத்துக் குறுக்கே வெட்டப்பட வேண்டுமென்பதைப் படத்திற் கண்டுகொள்க.

ஈண்டு நாம் கண்டவற்றில் எழுத்துக்கள் எவ்வாறு மாறினும் இலிங்க வடிவமுடைய புள்ளி தனியே திரிபின்றி நிற்பதைக் காண்கின்றோம். சிவம் அல்லது பதியின் மாறாமை, அழியாமை, தானாயிருக்குந் தன்மை, ஒன்றேயாகும் பண்பு ஆகியவை இதனாற் குறிக்கப்படுகின்றன. எங்ஙனம் எழுத்துக்களைப் பிரித்தெடுத்துக் கூட்டினும், இலிங்க வடிவினதாகிய புள்ளியின் அடி (பாதம்) ஒன்றே மற்ற எழுத்துக்களோடு சேர்கின்றதென்பதை நாம் கருத்தில் வைக்கவேண்டும். அகரத்தின் பிறபகுதிகள் இத்தன்மைய வல்ல.

(தொடரும்)

# பண்டைத் தமிழிசை ஆராய்ச்சி

[சென்னைப் பல்கலைக் கழகச் சார்பில் பல்கலைக்கழக மன்றத்தில் 22-2-36 சனிக்கிழமை தொடங்கி உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்]

சங்க இலக்கியங்களிலே விலை மதிக்க வொண்ணாத பொக்கிஷங்கள் இருக்கின்றன. அவை மூடுமந்திரங்களாகவே இருக்கின்றன. அப்பொக்கிஷங்களால் தற்காலத்துத் தமிழ் மக்கள் பலனடையவில்லை. அவற்றை அறிவு மேம்பாட்டிற்காக உபயோகித்துக் கொள்ளவுமில்லை. புராதனத் தமிழ்நாட்டு ஞானிகளின் அறிவுபதேசங்கள் தமிழ்மக்களுக்குப் புத்துயிர் அளிக்கத் தக்கவையாகும். சங்க இலக்கியங்கள் வெளிவந்ததால் தமிழர் வாழ்க்கையின் பல துறைகளிலும் புதிய சகாப்தம் ஏற்பட்டிருக்க வேண்டும்; ஆனால், மேனாட்டுக் கல்வியும் தமிழ்ப் புலமையும் நிறைந்த பண்டிதர்கள் வெகு சிலராகையால், அத்தகையவர்களால் அச்சங்க இலக்கியங்களில் காணும் விலைமதிக்க வொண்ணாத மாணிக்கங்களைத் தமிழரனைவரும் அறிந்து பெரும்பலனைப் பெறும்படி செய்வது முடியாமற் போனது. தற்கால வாழ்க்கை அதிகப்படியாகப் பலன் தருவதாகச்செய்ய உதவியான படிப்பினைகளுக்காகவே நாம் பழமையான நூல்களையும், வாழ்க்கைமுறை முதலியவற்றையும் ஆராய்கின்றோம். இவ்விதமே பண்டைக்காலத்து சங்கீதம், சித்திரக்கலை, சிற்பக்கலை இவை எவ்வாறிருந்தன வென்பது பற்றி ஆராய்வோம். சங்கீதம், சித்திரம், சிற்பம் இவை கலையுணர்ச்சி சம்பந்தப்பட்டவையாகும். கலையுணர்ச்சி முதிர்ந்த காலத்தில் இக்கலைகளும் அபிவிருத்தி யடைந்திருக்கும். ஒரு நாட்டின் மக்களுடைய மனோநிலையும், கலையுணர்ச்சியும், நாகரிகமும், சங்கீதம், சித்திரம், சிற்பம் இவைகளாலேயே தெளிவாகும்.

## தமிழர் பூர்வீகம்

தமிழர் மிக்க புராதன மக்கள். ஏசுநாதர் பிறப்பதற்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழர் எகிப்து, கிரீஸ் முதலிய அயல் நாடுகளுடன் வாணிகம் நடத்தி வந்தனர்; இந்தியாவின் பல பாகங்களிலும் வசித்து வந்தனர். அவர்களது பூர்வீகத்தைப் பற்றி அபிப்பிராயபேதம் உண்டு. தமிழர் வேறுநாட்டிலிருந்து குடியேறியவர்களல்ல வென்பதற்கு ஆதாரங்கள் பல.

குமரிக்குத் தெற்கே தமிழர் வசித்து வந்த பெரும்பா

கத்தைக் கடல் கொண்டது. பழந்தமிழர் சங்கீதக்கலை மிக்க அபிவிருத்தி யடைந்திருந்தது.

## காலப் பாகுபாடு

நாம் கவனிக்க வேண்டிய விஷயம் சங்கீதமாகும். இது சம்பந்தமாகக் காலபாகுபாடு செய்துகொள்வது அவசிய மாகும். காலத்தை மூன்று பிரிவுகளாக்கலாம். முதல் பிரிவான சங்க காலமானது சரித்திர காலத்திற்கு முற்பட்ட தாகும். இடைக்காலம் 7-வது நூற்றூண்டிலிருந்து ஆரம்ப மாகிறது. அக்காலத்தில்தான் சோழமன்னர்களது ஆட்சி செழித்திருந்தது. நாயன்மார்களும், ஆழ்வார்களும் தோன்றி யிருந்தார்கள். சங்கீதக் கலையும் புத்துயிர் பெற்றது. கடைப் பாகம் 14-வது நூற்றூண்டிலிருந்து ஆரம்பமாகும். சங்க காலத்தையே இரு பிரிவுகளாக்கலாம். முதற் பகுதியில் பௌத்தசமயம் பரவவில்லை இரண்டாவது பகுதியில் பௌத்த சமயமும், சமண சமயமும் பரவி விட்டன. ஏசுநாதர் பிறப்பதற்குஇரண்டு நூற்றூண்டுகளுக்கு முன்பு பௌத்தர்கள் வட நாட்டிலிருந்து தமிழகம் புகுந்தனர். அதற்கு முன்பு தமிழ் மொழியும் தனி இயல்புடனிருந்தது.

## பாணர் குணதிசயங்கள்

நான் பேசப் போகும் பாணர், சங்க காலத்தவர்கள்; அவர்கள் கலையுணர்ச்சியே உருவானவர்கள்; எனினும் ஏழை கள்; அவர்களுக்குச் சொந்த வீடு வாசல்களில்லை; அவர்கள் தத்தம் மனைவிகளுடனும், யாழ்களுடனும் ஒரு குறுநில மன் னரது சபையிலிருந்து மற்றொரு குறுநிலமன்னரிடம் செல் லுவார்கள்; அம் மன்னர்களை மகிழ்வித்துப் பரிசில் பெறுவார் கள். பாணனது மனைவியின் பெயர் பாடினி; இவள் யாழ் வாசிக்க மாட்டாள்; நடனமே செய்வாள்.

தமிழ் மொழியிலே இலக்கிய சம்பிரதாயங்கள் இருக் கின்றன. காதல், இல்லறம் இவை சம்பந்தப்பட்டது அகத் திணையாகும். புறத்திணை போரிடல் முதலிய நடவடிக்கை களைக் குறிப்பதாகும். குறுநில மன்னரது இல்லற வாழ்க் கைக்குரிய பாத்திரங்களைக் கீழ்கண்ட தொல்காப்பியச் சூத் திரத்தால் அறியலாகும்:—

தோழி தாயே பார்ப்பான் பாங்கன்
பாணன் பாடினி யிளையர் விருந்தினர்

கூத்தர் விறலிய ரறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்க ளென்ப.
கற்புங் காமமு நற்பா லொழுக்கமு
மெல்லியர் பொறையு நிறையும் வல்லிதின்

விருந்துபுறந் தருதலுஞ் சுற்ற மோம்பலும்
பிறவு மன்ன கிழவோன் மாண்புகள்
முகம்புகன் முறைமையிற் கிழவோற் குரைத்த
லகம்புகன் மரபின் வாயில்கட் குரிய.

எக்காலத்திலும் காதல் வாழ்க்கை இடையூறுகளில்லாமலிருப்பதில்லை. புராதனத் தமிழ் மக்கள் நாகரிக மடைந்து விளங்கியதால் மனைவிமார்களுடன் சச்சரவு ஏற்பட்ட காலத்து அநாகரிக மக்களைப்போல் நடக்கவில்லை. சமாதானத்திற்குச் சிரிய முறையையே கையாண்டனர். குடும்பத்தில் சச்சரவு ஏற்படுமானால் பாணன் அங்குச் சென்று தனது சாதுர்யத்தால் சச்சரவைப் போக்கிச் சமாதானம் செய்வான். பாணனுக்கு அந்தப்புரத்தில் செல்ல யாதொரு தடையுமில்லை. எனினும், இந்தப் பாணர்கள் ஊர்களுக்கு வெளியே தனியான இயற்கை வளப்பமுள்ள இடங்களிலேயே வாசம் செய்வார்கள். அவர்கள் வாழும் இடங்களின் சுற்றுப்புறங்கள் மனதைப் பரவசப்படுத்த வல்லதாக விருக்கும்.

## புராதன வாழ்க்கையின் சிறப்பு

விழாக் காலங்களிலே ராஜ சபையில் பாணன் யாழ் வாசிப்பதும், பாடினி ஆடுவதும் வழக்கம். அக்காலத்து வாழ்க்கை தற்காலத்து வாழ்க்கையைப் போன்றதல்ல. ரோமாபுரி சாம்ராச்சியம் நிலைத்திருந்தபோது அந்நாட்டு மக்கள் எத்தகைய வாழ்க்கை நடத்தினரோ அத்தகையதே புராதனத் தமிழரது வாழ்க்கையுமாகும். ராஜசபையில் தங்கக் கிண்ணியிலே மதுவை எல்லோரும் பருகுவார்கள். அம் மதுவை இளம் பெண்களே வழங்குவார்கள். உள்ளூரிலே செய்த மதுவல்லாமல் அயல் நாட்டிலிருந்து வரும் மதுவையும் பருகினார்களாம். பாணன் இன்றி ராஜ சபை பூரணமானதல்ல. குறுநில மன்னர்கள் போருக்குச் சென்று திரும்பிய போதும் வேட்டையாடித் திரும்பிய போதும் பாணன் தமது இன்னிசையால் அவர்களுக்கு உற்சாக மூட்டுவான். குறுநிலமன்னர்கள் மிக்க மகிழ்வடைந்தபோது பாணனுக்குப் பொன்தாமரையைப் பரிசளிப்பார்கள்; பாடினிக்குப் பொன் மாலை அளிப்பார்கள். பாணனுக்கும், பாடி

ளிக்கும் ராஜ சபையில் நன் மதிப்பும், சமத்துவமும் அளித்து வந்தனர். அவரது தொழிலுக்கும் மதிப்பிருந்தது. குறுநில மன்னர்கள் பாணனுக்கு எல்லாவித சௌகரியங்களையும் செய்து தங்களை விட்டு நீங்கவேண்டாமென்று வற்புறுத்தினும் அவன் ஓரிடமே இருப்பதில்லை. அவ்வப்போது கிடைத்த திரவியத்தைச் செலவிட்டு மற்றொரு ராஜசபைக்குச் செல்வதே வழக்கமாகும். இத்தகைய பாணர்கள் தங்கள் யாத்திரையின்போது நடுவழியில் ஒருவரையொருவர் சந்திப்பதுண்டு. ஒரு பாணன் மற்றவனுக்குத் தனக்கு பரிசு அளித்த வள்ளல் இருக்கும் இடத்திற்கு வழி சொல்வதுண்டு. பரிசில் பெற்றானொருவன் தனக்குப் பரிசில் அளித்தவரது வள்ளன்மைமையையும், அவரது நகரங்களினியல்பையும், அவற்றிலுள்ளாருடைய நற்குண நற்செய்கைகளையும், அவரது அரண்மனையின் சிறப்பையும், பல திறத்தினரும் ஏத்தும்படி பல குணவிசேடத்தோடு அவர் வீற்றிருத்தலையும் பரிசில் பெறக் கருதிய பாணனொருவனுக்குக் கூறுவான். பாணர்கள் தேர், குதிரைகள், யானைகள் முதலியவற்றைப் பரிசிலாகப் பெறுவார்கள். குறுநில மன்னர்கள் இந்தப் பாணரை அன்புடனும், சமத்துவத்துடனும், நன்மதிப்புடனும் நடத்துவார்கள்.

செங்கோட்டியாழ்



## யாழ்கள்

இந்தப் பாணர் எடுத்துச்செல்லும் யாழ்கள் இரு வகைப்படும். ஒன்று பேரியாழ்; மற்றொன்று செங்கோட்டியாழ். இந்த யாழ்களின் வருணனையைப் பத்துப்பாட்டில் காணலாம். இந்த யாழ்களின் அமைப்பு எவ்வாறிருந்த தென்பதை யூகிக்கக்கூடும். இந்த வாத்தியங்கள் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தன. சிறிது காலத்திற்குப்பின் மகரயாழ், சகோடயாழ் என்ற இரு புதிய யாழ்கள் தோன்றின. முதலிரண்டு யாழ்களும் சங்க காலத்தவை; செங்கோட்டியாழான சிறிய யாழுக்கு 7 தந்திகள்; பேரி

யாழுக்கு 21 தந்திகள்; சகோடயாழுக்கு 14 தந்திகள்; மகர யாழுக்கு 17 தந்திகள். மகரயாழும் சகோடயாழும் சிலப் பதிகார காலத்திற்குப் பிற்பட்டவையாகும்.




பாணனுடனே அவனது மனைவியான பாடினி உடன் செல்வாள்; பாணன் யாழ்வாசிக்கும்போது இவள் ஆடுவாள்; இவள் யாழ்வாசிப்பதே இல்லை. பாடினி கற்புடையவள் ; கற்புக்கு அறிகுறியான முல்லை மலரை அணிந்திருப்பாள். எனவே, கற்புடைய மாதர்கள் அக்காலத்தில் நாட்டியம் செய்தன ரென்றால் அக்காலத்து நாட்டியம் விலைமாதருக்குரிய கலையாகிய க்ஷீணதசையையடையவில்லையென்பது விளங்கும்.



சகோடயாழ்



மகரயாழ்

பின்னர் நாட்டியம் விறலியர், கூத்தர் முதலியோர்களது கலையாயிற்று. விறலியரே யாழ் வாசிக்கவும் ஆரம்பித்தனர்.

கல்லாடம் மத்தியகால நூலாகும். அப்பொழுது ஆரியக்கலை தமிழ் நாட்டில் கலந்துவிட்டது. அக்காலத்திலே 1000 தந்திகளையுடைய நாரதப் பேரியாழ், 100 தந்திகளையுடைய கீசகயாழ், 9 தந்திகளையுடைய தும்புரு யாழ், ஒரே தந்தியுடைய மருத்துவ யாழ் ஆகிய இவை ஏற்பட்டன. இந்த யாழ்களின் லட்சணங்களைக் கல்லாடம் என்னும் நூலில் காணலாம்.

இதுவரையில் எவரும் இந்தயாழ்கள் எவ்வா றிருக்குமென்பதை நிச்சயிப்பதில் சித்தியடையவில்லை யென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தற்போது பரதநாட்டியமும், சங்கீதமும் புத்துயிர் பெற்றிருக்கையில் புராதன தமிழர் கலையையும் ஆராய்வது பலனுடையதாகும்.

## தமிழ் இசை ஸ்வரங்களும், கணித அளவும்

புராதனத் தமிழ் இசை வல்லுநர்கள் ஆரம்பத்தில் உபயோகித்து வந்தது இரு யாழ்களாகும். ஒன்று பேரி யாழ்; மற்றொன்று செங்கோட்டியாழ். பேரியாழுக்கு 21 தந்திகள்; செங்கோட்டியாழ் அல்லது சிறு யாழுக்கு 7 தந்திகள். கிறிஸ்து பிறந்த இரண்டொரு நூற்றாண்டுகளில் 17 தந்திகளையுடைய மகரயாழும் 14 தந்திகளையுடைய சகோட யாழும் தோன்றலாயின. கி. பி. 10-வது நூற்றாண்டிலோ அல்லது, அதற்குப் பின்னரோ வாழ்ந்த கல்லாடர் என்ற புலவர் இதர நான்கு யாழ்களைக் குறிப்பிடுகின்றார். அவையாவன:—1000 தந்திகளையுடைய நாரதப் பேரியாழ்; 100 தந்திகளையுடைய கீசகப் பேரியாழ்; 9 தந்திகளையுடைய தும்புருயாழ்; ஒரே தந்தியுடைய மருத்துவயாழ்; தும்புரு யாழும், மருத்துவ யாழும் வீணை போன்றவையாகும். நூல்களில் காணும் வருணனையிலிருந்து அந்த இசைக் கருவிகள் அழகிய வேலைப் பாடமைந்தன வென்றும், விலையுயர்ந்த ரத்னங்களை அக்கருவிகளுக்குள் போட்டிருந்தனரென்றும் அழகிய மாதர்கள் உபயோகிக்கும் யாழ்களைப் பட்டால் செய்த அழகிய பெட்டிகளில் வைப்பரென்றும் தெரிகிறது.

### யாழின் வருணனைகள்

யாழின் வருணனைகளை இரு பாணாற்றுப் படைகளிலும், பொருநராற்றுப் படையிலும், மலைபடுகடாமிலும், சிலப்பதிகாரம், கல்லாடம் இவைகளிலும் விரிவாகக் காணலாம். இனி நான் கூறப் போகும் விஷயங்கள் எல்லாம் அந்த வருணனைகளையே அடிப்படையாகக் கொண்டவையாகும். பேரி யாழ் கையில் தூக்கிச் செல்லக் கூடியதாகும்; பிற்காலத்து நாரதப் பேரி யாழ், தும்புரு யாழ் போன்றதல்ல. பேரி யாழ் மூன்று ஸ்தாயிகளிலும், ஏழு ஸ்வரங்களை ஒலிக்கும் 21 தந்திகளையுடையதாகும். 7 ஸ்வரங்களுக்கும் தமிழ்ப் பெயர்கள் வருமாறு:—

குரல்
துத்தம்
கைக்கிளை
உழை
இளி
விளரி
தாரம்

தாரம் என்பது சம்ஸ்கிருதச்சொல்லன்று. சமஸ்கிருதத்திலுள்ள தாரம் என்பதற்கு வேறு பொருள் உண்டு. புராதனத்

தமிழ் ஸ்வரங்கள் என்ன வென்பதையும், அவைகளுக்கும் தற்போதுள்ள ஸ்வரங்களுக்கு முள்ள சம்பந்தம் என்ன வென்பதையும் விவாதிக்கு முன், நாம் 7 ஸ்வரங்களின் தோற்றத்தைப்பற்றியும், பாணன் தமது யாழை எம்முறையில் வாசித்தானென்பதையும் கவனிக்கவேண்டும். முதலில் தோன்றிய ஸ்வரம் தார மென்பதாகும். இதர ஸ்வரங்கள் எவ்விதம் தோன்றின வென்பது கீழ்க்காணும் பாட்டால் அறியலாகும்:—

"தாரத்துட் டோன்று முழையுழையுட் டோன்று
மோருங்குரல் குரலினுட் டோன்றிச்—சேருமிளி
யுட்டோன்றுந் துத்தத்துட் டோன்றும் விளரியுட்
கைக்கிளை தோன்றும் பிறப்பு"

தாரத்திலிருந்து உழையும், உழையிலிருந்து குரலும், குரலிலிருந்து இளியும், இளியிலிருந்து துத்தமும், துத்தத்திலிருந்து விளரியும், விளரியிலிருந்து கைக்கிளையும் தோன்றியது. தமிழ்ப்பாணன் ஒவ்வொரு ஸ்வரத்தையும் இதர ஸ்வரங்களோடு கூட்டிக்கூட்டி வாசிக்க ஆரம்பித்தான். ஒரு ஸ்வரத்தையும் அதன் பஞ்சமத்தையும் கூட்டி வாசித்தபோது இனிமையான நாதம் ஏற்பட்டதைக் கண்டான். ஒரு தந்தியால் ஒரு ஸ்வரம் ஏற்பட்டால் அதன் மூன்றில் இரண்டு பாகம் அந்த ஸ்வரத்தில் பஞ்சமத்தையும், அரை பாகம் உச்ச ஸ்தாயியில் எட்டாவது ஸ்வரத்தையும் தோற்றுவிக்கு மென்பதைப் பாணன் ஆரம்பத்திலேயே கண்டுகொண்டானென்று தெரிகிறது. இந்த விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு இசைப் புலவனும், இசைக்கருவி செய்வோனும் சங்கீத சாஸ்திரமொன்றை சிருஷ்டித்தனர்.

## தந்தி நீள கணிதம்

முதன்முதலாகப் பேரியாழின் 21 தந்திகளின் நீளத்தைக் கணித்துக்கொள்ளலாம். முதல் தந்தி 36 விரல் அளவு நீளமிருக்குமானால் 8-வது தந்தியும், 15-வது தந்தியும் முறையே 18 விரல் அளவும், 9 விரலளவு மிருக்கும். 5, 9, 13, 17, 21-வது இந்த தந்திகள் முறையே 21, 16, 10 2/3, 7 1/9, 4 20/27 விரல் அளவு இருக்கும். 16-வது தந்தி 9-வதைவிட உச்சஸ்தாயியில் 8-வது ஸ்வரமாகையாலும், 2-வது தந்தி கீழ் ஸ்தாயியில் 8-வது ஸ்வரமாகையாலும் இவை இரண்டின் நீளம் முறையே, 8,32 விரல் அளவாகும். இது போலவே இதர தந்திகளின் நீளத்தையும் கணிக்க வேண்டும்.

## சுருதி ஸ்தானங்கள்

பிறகு பாணன் ஸ்வர ஸ்தானங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்து 7 ஸ்வரங்களோடு புதிய 5 ஸ்வர ஸ்தா

னங்களைக் கண்டு பிடித்தான். அடுத்தபடியாக 12 ஸ்வர ஸ்தானங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்து மேலும், 10 ஸ்வர ஸ்தானங்களைக் கண்டுபிடித்தான். ஸ்வர ஸ்தான மென்ப தற்குத் தமிழில் அலகு என்பார்கள்.

கி. பி. 2-வது நூற்றாண்டிலேயே இந்த 22 சுருதி ஸ்தானங்களையும் தமிழர் கண்டு பிடித்து விட்டனர்; ஆனால், ஆராய்ச்சி அம்மட்டோடு நிற்கவில்லை. பாணன் அலகை (ஸ்ருதி ஸ்தானம்) பின்னப்படுத்திக்கொண்டே போனான். இதனால் 41 அரை சுருதி ஸ்தானங்களும், 94 கால் சுருதி ஸ்தானங்களும், 421 அரைக்கால் சுருதி ஸ்தானங்களும், 388 வீச (1/8) சுருதி ஸ்தானங்களும் கண்டு பிடிக்கப்பட்டன. பாணனது 1000 தந்தியுடைய யாழ் அரைவீச (1/16) சுருதி ஸ்தானத்தையும் காட்டியது. அந்த யாழில் பெரிய தந்தியின் நீளம், 84 விரல் அளவாகும்; சிறிய தந்தியின் நீளம் 32 விரல் அளவாகும்.

22 அலகுகள் அல்லது, சுருதிகளைப் பாணன் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்தான்:

| | | |
|---|---|---|
| குரல் | 4 | அலகுகள் |
| துத்தம் | 4 | ,, |
| கைக்கிளை | 3 | ,, |
| உழை | 2 | ,, |
| இளி | 4 | ,, |
| விளரி | 3 | ,, |
| தாரம் | 2 | ,, |

புராதன தமிழ் இசைக் கணிதத்தின்படி மாவே முதல் ஸ்வரமாகும். இதற்குப் பல ஆதாரங்கள் உண்டு. இந்த ஸ்வரங்களைச் சில மிருகங்கள், பறவைகள் இவைகளின் சப்தத்தோடு தமிழர் ஒப்பிட்டுள்ளனர். புராதனத் தமிழரின் குரல்-ம; துத்தம்-ப; கைக்கிளை-த; உழை-நி; இளி-ச; விளரி-ரி; தாரம்-க.

புராதனத் தமிழர் சோதிட சாஸ்திரத்தையும், இசைக் கணிதத்தையும் சம்பந்தப்படுத்தியிருப்பது மற்றொரு விசேஷமாகும். கீழ்க்கண்ட செய்யுள் அதனை வலியுறுத்தும்:—

இளியிடபங்கற் கடகமாம் விளரி சிங்கம்
தளராத தார மதுவாந்-தளராக்
குரல்கோற் றனுத்துத்தங் கும்பங் கிளையாம்
வரலா னுழைமீன மாம்.

12 ராசிகளில் தமிழர் கீழ்க்கண்ட ஏழைமட்டும் தெரிந்து கொண்டனர்; ரிஷபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, கும்பம், மீனம். இளியை ரிஷபமும், விளரியை கடகமும், தாரத்தை சிங்கமும், குரலை துலாமும், துத்தத்தை தனுசும், கைக்கிளையை கும்பமும், உழையை மீனமும் குறித்தன.

சிலப்பதிகாரத்தில், 7 இடைச்சிகள் குரவைக் கூத்தாடுகையில் மேலே கண்ட ராசிகளின் ஸ்தானங்கள் அமைந்திருப்பது போலவே வரிசையாக நிற்பார்களென்று கண்டிருக்கிறது.

தற்போது கர்நாடக சங்கீத சாஸ்திரப்படி அலகுகளைக் கீழ்க்கண்டவாறு பாகுபாடு செய்துள்ளனர். ச 4; ரி 3; க 2; ம 4; ப 4; த 3; நி 2.

(தொடரும்)

—விடுதலை.

# செய்திகளும் குறிப்புகளும்
# News and Notes

சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பில் சென்ற பிப்ரவரித் திங்கள் 22, 24, 25, 26, 28, 29-ஆம் நாட்களில் உயர்திரு. சுவாமி விபுலாநந்தர் அவர்கள் பி. எஸ். ஸி. (இலண்டன்) "பண்டைத் தமிழிசை" என்ற பொருள்பற்றி நான்கு சொற்பொழிவுகளும், "தமிழ்க்கலையும் சிற்பமும்" என்ற பொருள்பற்றியும், "தமிழும் அறிவியலாராய்ச்சியும்" என்ற பொருள்பற்றியும் இரண்டு சொற்பொழிவுகளும் நிகழ்த்தினர்கள். பல அறிஞர்களும், மாணவர்களும், பொது மக்களும் நாடோறும் பெருந் தொகையினராகக் குழுமி, பொருட்செறிவும் புதுக்கருத்துகளும் நிறைந்த அச்சொற்பொழிவுகளைச் செவிமாந்தினர். தலைமை தாங்கிய மகாமகோபாத்தியாய குப்புசாமி சாஸ்திரியாரவர்கள் சுவாமிகளின் அறிவுப் பெருக்கத்தையும் ஆராய்ச்சி வன்மையையும் வியந்து பாராட்டியதுடன் தமிழ் நூற்களில் இற்றை நாளுக்கு இன்றியமையாது வேண்டப்படுவனவாய எல்லா அறிவியற் கருத்துக்களும் பொதிந்து கிடப்பது மிகவும் போற்றத்தக்கதாகும் என்றும், இந்திய நாட்டின் பண்டைய மக்களுக்குத் தமிழ் மொழியும் வடமொழியும் இரண்டுகண்களாகவே திகழ்ந்திருக்க வேண்டுமெனத் தாம் கருதுவதாகவும் கூறி முடித்தார்கள்.

* * *

தேங்காய் எவ்வெவ்வகையிற் பயன்படும்? இதற்கு விடை இலங்கைத் தேங்காய்க் களஞ்சியத்திற்கு அனுப்பப்பட்டுவரும் பொருள்களை ஆராய்ந்தால் எளிதிற் கிடைக்கும். தேங்காயெண்ணெய், தேங்காய்ச் சாராயம், தேங்காய் ரொட்டி, டாஃபி என்ற தின்பண்டம், தேங்காய்வெல்லம், தேங்காய் நறுமணப் பொருள்கள், தேங்காயோட்டினாற் செய்யப்பட்டுப் பொன்னாலும் வெள்ளியாலும் கட்டப்பட்ட நகைகள், கிண்ணங்கள், பொத்தான்கள், தீக்குச்சிகள் ஆகியவையும் இன்னும் இவைபோன்ற பிறவும் அப்பொருள்களாம்.

* * *

இராஜ புதனத்திலுள்ள கோட்டா சமஸ்தானத்தில் பண்டைக் கல்வெட்டுகளும் கட்டிடங்களும் இப்பொழுது முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. கண்டு பிடித்தவர் வாரணாசி இந்துப் பல்கலைக்கழகப் பண்டை வரலாற்றுக் கலைநூற் பேராசிரியர் டாக்டர் எ. எஸ். அல்டேக்கார் மனீத்ரசந்திர நந்தி என்பார். கல்வெட்டுகள் இதுவரையில் அப்பகுதியிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ளவைகளெல்லாவற்றிற்கும் முற்பட்டவை; சிறிது திரிந்த வடமொழியிலுள்ள அவை விக்ரம சகாப்தம் 2391-க்கு உரியனவென்றும் கி. பி. மூன்றாம் நூற்றாண்டிற்கு முன்பாகவே முகரி வழியினர் ஆங்கு அரசுரிமை பூண்டிருந்தனரென்பது அவற்றால் நிலைநாட்டப்படுகின்றன வென்றும் ஆசிரியர் கூறுகிறார். அக்கல்வெட்டுகளில் ஒன்று சிவலிங்கவழிபாடு குறிக்கின்றதாம்; ஒன்று சோமநாத சுவாமிக்குப் பல மானியங்கள் விடப்பட்டமையைக் குறிக்கின்றதாம்; ஒன்று ஜெயசிங்க மன்னன் அவனுடைய புலவர் நாயகமாகிய நாராயணா என்பவர்க்கு ஒரு சிற்றூரைப் பரிசிலாக அளித்ததைக் குறிக்கின்றதாம். வேலைப்பாடமைந்த பல கோயில்களும் ஆண்டுத் தோண்டப்பட்டுள்ளன.

* * *

சென்னை மாகாணத் தமிழ்ச்சங்கத்தின் சார்பில் சென்ற மார்கழி௴ ௰௫௨ (30-12-1935) திங்களன்று காலை $9\frac{1}{2}$ மணிக்குச் சென்னை மாகாணத் தமிழர் இரண்டாவது மாநாடு மேலைத்தஞ்சாவூர் நாட்டாண்மைக்கழகத் தலைவர், திரு. வி. நாடிமுத்துப்பிள்ளை அவர்கள் தலைமையில் திருநெல்வேலிப்பாலம், இந்து கலாசாலையில் தொடங்கி நடைபெற்றது.

அக்காலை பத்துத் தீர்மானங்கள் நிறைவேறின. அவை பின் வருவன:—

**தீர்மானம் க.**—திருப்பனந்தாள் மடாதிபதி மறைத்திரு காசி வாசி சுவாமிநாத சுவாமி அவர்கள் இச்சங்கத்தார் ஆக்கிவரும் தமிழ்க்கலைச்சொற்களை இருமுறை அச்சிடவும் முதற்பதிப்பிலுள்ள சொற்களைச் சீர்திருத்துவோர்களுக்குப் பரிசுகள் கொடுக்கவும் முன் வந்தருளியதை இம்மாநாடு போற்றுவதுடன் அன்னாருக்குத் தமது உளங்குளிர் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது.

**தீர்மானம் உ.**—மொழிகளுள் தமிழ் மிகப் பழமை வாய்ந்ததும், பலதுறைக் கல்விகளும் அமைந்துள்ளதும், கிளைமொழி பல

உடையதுமாகையால், அதனை உயர்தனிச் செம்மொழி (Classical language) என்று கருதி நடத்தவேண்டுமென்று இந்த மாநாடு சென்னை, அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தார்களையும் சென்னைக் கல்வித்துறை அரசியல் அமைச்சரையும் ஆட்சியாளரையும் வேண்டிக் கொள்கிறது.

**தீர்மானம் ௩.**—கல்லூரிகளிலும் உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலும் ஆங்கிலமொழிந்த எல்லாப் பாடங்களையும் தாய்மொழியிலேயே கற்பித்தல் வேண்டுமென்ற விதியை வற்புறுத்தி நடத்த வேண்டுமென்றும், இந்தச் சங்கத்தார் இயற்றியமைக்கும் அறிவு நூல் தமிழ்ச் சொற்களையே பயன்படுத்த ஏற்பாடுசெய்ய வேண்டுமென்றும் கல்வித்துறை ஆட்சியாளர்களையும் பொறுப்பாளர்களையும் இந்த மாநாடு வேண்டிக்கொள்ளுகிறது.

**தீர்மானம் ௪.**—ஆங்கில ஆசிரியர்களுக்குள்ள தகுதிகளும் பொறுப்புகளும் தமிழாசிரியர்கட்கும் இருத்தலினுலே, அவ்வப்பள்ளிக்கூடங்களில் உள்ள ஆங்கில ஆசிரியர்கள் ஏனைய ஆசிரியர்கள் இவர்களுக்குத் தருவதுபோலச் சம்பளம் தமிழாசிரியர்கட்கும் தர வேண்டுமென்று அரசியல் தலைவர்களையும் கல்லூரி நடத்தும் செல்வர்களையும் இம்மாநாடு வேண்டிக்கொள்கிறது.

**தீர்மானம் ௫.**—தமிழ்மக்கள் தாய்மொழியில் மிகுந்த பற்று வைத்து அதை வளர்க்க முன்வரவேண்டுமென்றும், கூடியவரை தமிழ்ச்சொற்களையே நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், தமிழ்மக்கள் ஒருவர்க்கொருவர் தமிழிலேயே பேசவும் எழுதவும் வேண்டுமென்றும், தமிழ்த்தாய்க்கு என்றே ஆண்டில் ஒரு நாளைத் தனியாக ஏற்படுத்தித் தமிழ்நாடெங்கும் விழாவாகக் கொண்டாட வேண்டுமென்றும் இந்த மாநாடு தமிழ்மக்களைக் கேட்டுக் கொள்ளுகிறது.

**தீர்மானம் ௬.**—ஆங்கிலத்திலும் வடமொழியிலும் இருப்பது போலத் தமிழிலும் துணைமொழி யில்லாமல் B. A., Hons, M. A., பட்டங்களுக்குத் தமிழிலேயே தேர்வு ஏற்படுத்தியிருக்கிற அண்ணுமலைப் பல்கலைக்கழகத்தாரைப் பாராட்டுவதோடு அப்படியே சென்னைப் பல்கலைக்கழகத்திலும் ஏற்படுத்தப்படவேண்டுமென்று இந்த மாநாடு சென்னைப் பல்கலைக்கழகத்தாரை வேண்டிக்கொள்கிறது.

**தீர்மானம் ௭.**—இப்போது தமிழ்நாட்டில் காணப்படுகிற தமிழ் அசைவொலிப்படங்களும் (Talkie pictures) பாடுதட்டுக்களும், (Gramaphone records) பல்வகைக் குற்றங்களுடையனவாய் இருப்பதுகண்டு வருந்துவதோடு, உண்மையில் அவை தமிழ் மக்களின் வாழ்க்கையையாவது மன நிகழ்வுகளையாவது காட்டுவன அல்லவென்று உணர்ந்து இனிமேல் தமிழ்மணம் செறிந்தனவும் தமிழ் மக்களின் உயர்நிலைக்கும் பெருமைக்கும் பொருந்துவனவும் தமிழ் மக்கள் இயல்பை உள்ளவாறு காட்டக்கூடியனவும் ஆகிய படங்களையும் பாடுதட்டுக்களையும் ஆக்கத் தமிழ் மக்கள் முன்வரவேண்டும் என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தீர்மானம் அ.—அரசியல் பாடநூற் கழகத்தா (Text Book Committee)ரால் ஒப்புக்கொள்ளப்பட்ட நூல்களிலும் அரசியலாரால் வெளியிடப்பட்ட பள்ளி இறுதித் தேர்தலுக் (S. S. L. C.) குரிய தமிழ்ப்பாடச் சுவடிகளிலும் பிழை மலிந்து கிடப்பதைக் கண்டு இந்த மாநாடு வருந்துவதோடு தக்க தமிழறிஞர்களை அக்கழக அங்கத்தின ராய் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அரசியல் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறது.

தீர்மானம் க:—இப்பொழுதிருக்கும் கல்விமுறையால் வேலை யில்லாக்குறைவு மிகுகின்றபடியால் பொதுக்கல்வியுடன் தொழிற் கல்வியும் சேர்த்துக் கல்விமுறை தக்கவாறு மாற்றியமைக்கப்பெற வேண்டு மென்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

தீர்மானம் ய.—இதில் கண்ட தீர்மானங்களை அனுப்பவேண் டியவர்களுக்கு அனுப்பி வேண்டுவன செய்ய இந்த மாநாடு அமைச்சர் அவர்களுக்கு ஆணை தருகிறது.

* * *

திருவள்ளுவர் திருநாட் கழகத்தினரால் வெளியிடப்பட்ட **1935**-ஆம் ஆண்டு நினைவுமலர் வெளிவந்து பார்வையிட்டோம். நினைவுமலர் கண்ணைக்கவரும் வனப்புடையதாய்ப் பல நிழலுருவப் படங்களோடு கூடியதாய், திருக்குறளைப் பற்றிய சிறந்த பல உண்மை களைக் கொண்டதாய்த் திகழ்கிறது. 160 பக்கங்களுக்குக் குறையாமல் உயர்ந்த தாளில் மிகவும் அழகாக அச்சிடப்பட்டுள்ள இம்மலர்விலை அணு ஒன்பதே.நம்மிடங் கிடைக்கும்.

* * *

தேவார திருப்புகழ் இசைவாணர் வேலூர். மு. அப்பாத்துரை ஆச்சாரியார் அவர்கள் சென்ற 4-3-36 புதனன்று திடுமெனக் காலஞ் சென்றமை தமிழிசை யுலகிற்கும் தமிழுக்கும் நிரப்பொணு இழப் பாகும். அவன் புகழை விண்ணுலகிற் பாடச்சென்ற பெரியாரின் உயிர் அமைதி யடைவதாக.

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களிற் சிறந்தவரும், பல தமிழ் நூல்களுக் காசிரியரும், திருவள்ளுவர் திருநாட் கழகத்தலைவ ருமாயிருந்த புலவர்ப் புரவலர், மாபெரும் வள்ளல் உயர் திரு. கா. நமச்சிவாய முதலியார், இத்திங்கள் 13-ஆம் நாள் இறைவன் திருவடி சேர்ந்தமை கேட்டு ஆருத்துயரடைகின் ரும். அவர் உயிர் அமைதி பெறுவதாக.

—

## சென்னைப் பச்சையப்பன் கலாசாலை

"கட்டு கோயில் வெட்டு குளம்" என்பது பெரியோர் ஆணையாக விருந்த காலத்தில் அதற்கியைய பல கோயில்களுக்குப் பல்லாற்றானும் பொருளுதவி புரிந்து நிலம் மனை முதலியவற்றை முற்றூட்டாக எழுதிவைத்த பெரியார் சென்னையில் முன்னை நாள் வதிந்த பச்சையப்ப முதலியாரவர்கள் ஆவர். நடுநாட்டிலும் சோழநாட்டிலும் உள்ள திருப்பதிகளுள் அவருடைய வள்ளற்றன்மை யென்னும் வலைக்கட்படாத பெருந் திருப்பதி எதுவும் இல்லையென்றே துணிந்து கூறலாம். அப் பெருவள்ளல் வருங்காலத்தின் தேவையை அப்பொழுதே நன்குணர்ந்த பெருமானாக இலகினர் என்பதற்கு அக் கொடைகளோடு அவர் கல்வித்துறையில் பல பள்ளிக்கூடங்களை நிறுவியமையே சான்றாகும். இம் மாகாணத்தின் தலைநகராகிய இச் சென்னை நகரின்கண் நடுநாயகமாய் விளங்கும் ஜியார்ஜ்டவுன் என்ற பகுதியின் நடுவண் அவர் அக்காலையமைத்த, அவர் பெயர் கொண்டு எழுந்துள்ள கலாசாலை எழிலுறத் திகழ்வது யாவருமறிந்ததே. தேர்ந்தமுறையிலும் சிறந்த மேற்பார்வையிலும் பொதுமக்களுக்குக் கல்வி வழங்கிவந்த அக் கலாசாலை இற்றைநாள் பொருள் வலிவு குன்றி ஆதரவுகுறைந்துவருவது வருந்தத்தக்கதாகும் அக் கலாசாலையின் ஆண்டுச் செலவை ஈடுசெய்வதே பெரிதுங் கடினமாக இருக்கிறதென்றும், தக்க பெருவள்ளல்களின் பேராதரவு இருந்தாலொழிய அக் கலாசாலை தான் மேற்கொண்ட பெருந்தொண்டை நன்காற்றி வருதல் முடியாதென்றும் தெரியவருகிறது. இந்நிலையறிந்த சென்னைப் பல்கலைக் கழகத்தார் ரூ. 10000 நன்கொடையாக இவ்வாண்டு உதவ முன்வந்துள்ளமை தமிழ்நாட்டாரால் பெரிதும் பாராட்டற்குரியதாகும். ஆயினும் இவ்வுதவி நிலையான அரண் அளிக்காதாகையால் அக் கலாசாலையிற் பயின்ற மாணவர்கள், பயிலும் மாணவர்கள் ஆகியோர் தத்தம்மாலியன்ற பொருளுதவியை யளிக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம். "சிறுதுளி பெருவெள்ளம்". பெருவள்ளல்கள் பெரும் பொருளுதவுமாறு திருவுளம் பற்றின் அதுவும் தமிழ்நாடுசெய்த பெரும் பயனேயாகும்.

---

380



துடிசைகிழார் அ. சிதம்பரனுர்.